# சிரித்திரன்

## தேர்தல் பழமொழி

மனைவியைப் பணத்திற்காகத் தேர்ந்தெடுப்பவன் மூடன்
அபேட்சகரை பணத்திற்காகத் தேர்ந்தெடுப்பவன் முட்டாள்.

□ □

ஆசிரியர்: அருவி வெட்டுக் காலத்திற்கும் தேர்தல் காலத்திற்கும் உள்ள ஒற்றுமை என்ன?

மாணவன்; அருவி வெட்டுக் காலத்தில் தூற்றி நெல் சேர்க்கப்படுகின்றது. தேர்தல் காலத்தில் தூற்றி வோட்டுச் சேகரிக்கப்படுகின்றது.

## அழிப்பு:

பிரமன் எழுதிய
தலையெழுத்தை
ஐந்து வருடத்திற்கொருமுறை
வரும்—
ஆட்சியாளர்
அழித்து
அழித்து
எழுதுகின்றனர்.

## பற்று

கட்சி வெறியில்
தன் கட்சி—
அபேட்சருக்காய்
அல்லும்—பகலும்
அலைந்து திரிந்து,
ஆலாய்பறந்த-
தொண்டன்—
தேர்தலில்
வாக்களிக்கவில்லை,
காரணம்
மதுவெறி.

## கட்சிதம்

அந்த பசுமாடு தன்னைக் கட்டியுள்ள கட்டையைச் சுற்றிச் சுற்றி வந்தபடி கீழே [illegible] கைக்கோலை மேய்ந்துகொண்டிருந்தது.

அந்தவீட்டு வேலியோடு வேலியாய் ஏதாவது இரைகிடைக்குமா, என்று தலையாட்டியபடி அவதானித்துக் கொண்டிருந்த ஓணான் பசுவைநோக்கிக் கேட்டது.

''நீ உனது கட்சிக்காரனுக்கு சரியான விசுவாசியாயிருப்பாய் போலிருக்கிறது... ஒரே இடத்தை சுற்றிச் சுற்றி வருகிறாயே''

சிறிதுநேரம் யோசித்துவிட்டு பசு சொல்லியது...

'நான் விசுவாசமாக இருப்பதால்தான் எனக்கென்று ஓர் இடம் நிரந்தரமாக இருக்கிறது. நீ இரை கண்ட இடத்தில் தலையாட்டி நிறம் மாற்றுவதால் தான்உனக்கு வேலியே கதியாக இருக்கிறது...

ஓணான் வேலியோடு வேலியாகி மறைந்து கொண்டது.



ஒரு அரசியல்வாதி: எங்கள் கட்சிதான் மக்களைக் காப்பாற்றும்

மறு அரசியல்வாதி: மக்களே எங்கள் கட்சிதான் காப்பாற்றும்.

வைகாசி 1979 விலை ரூபா 1-00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## உலகப்புகழ் பெற்ற சோதிடரைக் கேளுங்கள்!



**உங்கள்**

- விவாகம்
- தொழில்
- ஆரோக்கியம்
- பிரயாணம்
- கல்வி
- தோட்டம்
- சேமிப்பு
- செல்வம்
- பிள்ளைகள்

முதலிய இன்னோரன்ன பிரச்சனைகளுக்கு தீர்வுகாண

## சோதிடக் கலாநிதி

# பண்டிட் K. N. நவரத்தினம் A. F. A.

211 நாவலர் வீதி, (இலங்கை) யாழ்ப்பாணம்.

| | | |
|---|---|---|
| 1. | ஒருவருடப்பலன் எழுத | 50.00 |
| 2. | இரண்டுவருடப் பலன் எழுத | 100-00 |
| 3. | மூன்றுவருடப் பலன் எழுத | 140-00 |
| 4. | ஐந்துவருடப் பலன் எழுத | 200-00 |
| 5. | ஒருசாதகத்தை விரித்து விபரிக்க | 300-00 |
| 6. | ஆயுள் சாதகம் எழுத | 1500-00 |
| 7. | ஆயுள் சாதகம் 30 வயதுக்கு மேற்பட்டவர்க்கு | 1000-00 |
| 8. | குறிப்பு எழுத ம்ாத்திரம் | 25-00 |
| 9. | வெளிநாட்டுக் குறிப்பெழுத மாத்திரம் | 50-00 |
| 10. | ஒரு கேள்விக்குப் பதில் | 40-00 |
| | அதேசாதகத்தில் ஏனைய கேள்விகள் ஒவ்வொன்றுக்கும் | 10-00 |

**பெயர், பிறந்த திகதி, சரியான நேரம், இடம், பால் முதலியவற்றுடன் முழுத்தொகையும் அனுப்பவும்.**

குறிப்பு: பலன்கள் யாவும் ஆங்கிலத்தில் எழுதப்படும். நாடாமூலம் ஒலிப்பதிவு செய்ய விரும்புவோர் அங்ஙனம் தமிழில் செய்யலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நகை — 17

சுவை — 5

மே — 1979

சிரித்திரன்

பைத்தியக் கார உலகம் 1.



விஞ்ஞானி யாரென்று தெரியுமா?

தெரியவில்லையே!

அது படித்த தீப்பறவை. அணுக்குண்டு முட்டையிடும் இந்த முட்டை மனிதனைச் சாப்பிடும்.

—ஜோக்கிரட்டீஸ்

## கௌரவிக்கும் பண்பு

மேல் நாட்டவர்கள் தமது அறிஞர்களையும் கலைஞர்களையும் கௌரவிக்கும் பக்குவம் உடையவர்கள். ஏன் தமது விளையாட்டு வீரர்களையும் கௌரவிக்கத் தவறுவதில்லை.

பிரேஸில் நாடு தனது உலகப் புகழ்பெற்ற உதைப்பந்தாட்ட வீரர் 'பேல்' என்பவருக்கு முத்திரை வெளியிட்டு கௌரவித்ததுடன் அவரது கால்களையும் பல லட்சத்துக்கு 'இன்ஸ்யூர்' செய்துள்ளது.

உலகப் புகழ்பெற்ற பெண் டெனிஸ் சாம்பியனாகிய கிரீஸ் எவரெஸ்ட் அவர்கள் பாவித்து விட்டு எறிந்த உடைகள் முதல் அவருடைய டெனிஸ் ஷூலேஸ் வரை அவரது விசிறிகள் சேகரித்து பாதுகாத்து வைப்பதில் பெருமை கொள்கின்றனர்.

மேற்கத்திய கிரிக்கட்வீரர் சோபர்ஸ் 'சேர்'பட்டம்வழங்கப்பட்டு கௌரவிக்கப் பட்டுள்ளார்.

அது மட்டுமல்லாது ஒரு போட்டியின்போது ஒரு ஓவரில் 6 பந்துகளை 'சிக்ஸர்' களாகஅடித்து சாதனை செய்துள்ளார். அந்தப் பந்து இப்போது பிரிட்டிஷ் மியூசியத்தில் பாதுகாப்பாக வைக்கப் பட்டுள்ளது. அந்தப் பந்தைத் தயாரித்த கொம்பனி அதனைப் பெறுவதற்கு எவ்வளவோ லட்சம் பணம் கொடுக்க முன்வந்தும் மியூசியத்தார் கொடுக்க மறுத்து விட்டார்கள்.

முன் தோன்றிய மூத்தகுடியென்று மார்பு நிமித்தும் நாம் எமது மேதைகளை வீரர்களையும் இறந்தபின்பு கௌரவிக்கும் பண்புடையவர்கள். அதையும் இதைய பூர்வமான பற்றுடன் செய்யத் தவறி விடுகின்றோம்.

திருவாவடுதுறை டி. என் ராஜரத்தினம் பிள்ளையவர்கள் இசையுலகில் நாதஸ்வரச் சக்கரவர்த்தியாகத் திகழ்ந்தவர். அவர் இறுதிக்காலத்தில் மருந்து வாங்குவதற்கு தனது காதுகளில் அணிந்திருந்த வைரக் கடுக்கன்களை அடமானம் வைத்திருந்தார். அவரால் கடுக்கன்கள் மீட்கப்படாமல் போகவே ஏலத்திற்கு விடப்பட்டது. தமிழகத்தில் வாங்குவோர் இல்லாமல் போகவே அது பம்பாயில் விற்பனையானது. இச் செய்தியை நான்பேப்பரில் படித்த போது நமது இனப்பற்று கலைப் பற்று எல்லாம் வெறும் வாய்ப் பந்தல்தான் என உணர்ந்து கொண்டேன்.

மெயில்வாகனத்தார்

## சிரித்திரன் ______

## சிறுகதைப் போட்டி

'சிரித்திரன்' எழுத்தாளர்களின் ஆற்றலை வெளிக் கொணர சிறுகதைப்போட்டியொன்றை அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறன்.

★ விபரங்கள்—
★ எவரும் பங்குபற்றலாம் வயதெல்லை கிடையாது.
★ சிறுகதைகள் சிரித்திரனில் நான்கு பக்கங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.
★ கதைகள் அதனை எழுதுபவரின் சொந்தக் கற்பனையாக இருக்கவேண்டும்.
● புல்ஸ்காப் தாளின் ஒருபக்கத்தில் தெளிவாக எழுதவேண்டும்.
★ போட்டி நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதி முடிவு.
★ முடிவுதேதி - 15-6-1979.
★ போட்டிக்கு வரும் கதைகள் திருப்பி அனுப்பப்படமாட்டா.

முதற் பரிசு: ரூ. 50/-
இரண்டாம் பரிசு: ரூ. 25/-
மூன்றும் பரிசு: ரூ. 15/-

### நூலறிவு

நூல் தமிழனைப் பார்த்துகேட்டது 'நான் என்இனத்துடன் இணைந்து உங்க மானத்தைக் காப்பாற்றுகிறேன். நீங்களோ உங்களுக்குள் பிரிந்து உங்கள் மானத்தை இழக்கின்றீர்கள்.''

—அதிமதுரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரசப்பொடி

- நல்லை ஆதினத்து ஓதுவார் மூர்த்தியாகிய திரு தில்லை மணியவர்கள் இன்றுபல இன்னிசை நிகழ்ச்சிகள் நடத்திக் கொண்டிருக்கின்றார். அவரின் கனமான கனிவான குரலைக்கேட்ட இசைப்பிரியர்கள் இவருக்கு சங்கீத உலகில் நல்ல எதிர்காலமுண்டு எனப்பேசிக்கொள்கின்றனர்.
- கவி காளிதாசனின் 'சாகுந்தலம்' காவியத்தை சோவியத் ரஷ்யாவில் 'பாலே' முறையில் நாட்டிய நாடகமாக உருவாக்கி வருகிறார்கள். இதற்காக சாகுந்தலம் பற்றிய முழுமையான ஆராய்ச்சியொன்றினை இந்தியாவின் அதன் தயாரிப்பாளர்கள் மேற்கொண்டு வருகின்றார்கள்.
- நடிகை, பாடகி, இசையமைப்பாளர் தயாரிப்பாளர், கதை வசனகர்த்தா, நாவலாசிரியை, ஸ்ருடியோ நிர்வாகி, திரைப்பட டைரக்டர்—இப்படி சகலகலா வல்லுனராகத் திகழும் நடிகை டாக்டர் பானுமதி. இப்போது B. A பரீட்சைக்கு படித்து வருகிறார். அவரது லட்சியம் சட்டவல்லுனராக ஆகவேண்டு மென்பதுதான்.
- அபூர்வ ராகங்கள் பட டைரக்டர் கே. பாலசந்தருக்கு பிடித்தராகம் 'கல்யாணி' காரணம்: அது ஒன்றே அவருக்குப் புரிந்த ராகமாம்.
- இசையமைப்பாளர் M. S. விஸ்வநாதன் ஆரம்ப நாட்களில் படங்களில் பெண்வேடமிட்டு 'குரூப்' டான்ஸ் ஆடியிருக்கிறார்.
- 'நடு இரவில்' என்ற படத்திற்கு வீணை எஸ். பாலசந்தர் ஒரேயொரு இசைக்கருவியை வைத்துக் கொண்டே படம் முழுவதற்கும் இசையமைத்துள்ளார்.
- இலக்கியத்திற்காக சேவை செய்கிறவர்களுக்காக ரஷ்யப் பத்திரிகையான 'சோவியத் லாண்ட்' ஆண்டுதோறும் வழங்கும் பரிசு கடந்த ஆண்டு நாவலாசிரியர் அகிலனுக்கு கிடைத்திருக்கிறது.
- இளையராஜா இசையமைத்த முதல் பாடல் எது தெரியுமா? அன்னக்கிளி உன்னைத்தேடுதே பாடல்

## எடுப்பு எமது முடிப்பு உமது கவிதைப் போட்டி—4

### பரிசுக்குரிய கவிதை

அப்பாவி மக்கள் அரைவயிற்றும் குந்தவைக்க
எப்போது மேறும் விலைவாசி — தப்பாது
தேர்தல் வருமேல் திடுமென்று கீழிறங்கி
ஊர்ந்திடுதல் தானே உலகு.

அனுப்பியவர்; க. பிரியதர்சினி
இல 14, பஜார் வீதி, சிலாபம்

### இம்மாதத்திற்குரிய கவிதை இதோ....

வாடி வெயிலில் வதங்கிக் கோடையிலே
தேடி வருவர்யாழ்ப் பாணம் —

Mrடா: நானும்ஒருவேர்ல்ட் றைக்கோர்ட் பிறேக் பண்ணப் போறேன்,

Mrs டா: வட்!

Mr டா; டமில், இங்லிஷ் மிக்ஸ் பண்ணுது வன் வீக், ஸ்பீக் பண்ணப் போறேன்.


Mrs டா: இற் இஸ் சிம்பிள்



டாக்டர்: உங்க கணவன் வீட்டில் இருக்கிறாரா?

அரசியல்வாதியின் மனைவி: இன்று கூட்டத்தில் நிறைய மாலைகள் விழுந்த புகழ் மயக்கத்தில் படுத்திருக்கிறார்.

டாக்டர்; நல்லதாப்போச்சு இப்பவே அவருக்குச்செய்ய வேண்டிய ஆப்பரேஷனைச் செய்துவிடுவோம்




### மாற்றம்

கரையை சட்டித் தழுவும்
கடலின்
புதிய அலை...
மறைந்து விட்டபின்
மண்ணிலதன் —
சுவடே மிஞ்சும்
மறுகணமே...
அடுத்த அலை—
வந்ததனை
அழித்தே செல்லும்?

● ரம்யா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குமிண் சிரிப்பு

**அதிமதுரம்**



கணவன்; நான் பெரிய எழுத்தாளன் எனக்கு விசிறிகள் ஏராளம்.

ம்னைவி; மண்ணுங்கட்டி வீட்டில் விசுக்க ஒரு விசிறியில்லையே

---

எருது: எங்களுக்கும் காலம் வரும்... காலம் வந்தால் வாழ்வும் வரும்

பசு: என்ன பாட்டு வருகுது

எருது: எண்ணை விலை ஏறுது எங்களுக்கு டிமான்ட் வரப்போகுது.

---

ஏனய்யா... அந்தக்காதல் ஜோடிக்குப் பிச்சை போட்டாய்!



கண் தெரியாது இருந்தார்கள்... போட்டேன்.

---

திருடன்; தமிழ்ப் பிரதேசங்களில் திருடுவது மிகவும் இலகு

நண்பன்: எப்படி?

திருடன்: விழிப்புணர்ச்சியில்லா மக்கள்

---




சேவல்: மனிதன் சமைத்துச் சாப்பிடும் அலாரம் மணிக்கூடு.

எழுத்து: தாளின் நிர்வாணத்தை மூடும் ஆடை.

சிகரட்; இயமனை ஊதி அழைக்கும் குழல்

அபேட்சகர்; தேர்தல் காலம் பிரசன்னமாகும் கும்பிடு பூச்சி.

---



மனைவி: பாழ்பட்ட ஊர் கிணறெல்லாம் காய்ஞ்சு போச்சு.

கணவன்: பயித்தியகாரி பனை ஊறிதள்ளுதே!

---

ஒரு: உதில் ஒரு சின்னமேளம் வருகுது.

மற்: என்ன அரசியல் பேச்சாளனை சின்னமேளம் என்கிறாய்.

ஒரு: சின்னமேளம் எல்லாக் கோயிலிலும் ஆடுவது போல உவர் எல்லாக்கட்சி மேடைகளிலும் பேசுவார்.

---



ஒரு: கல்லிலே தமிழன் கலைவண்ணம் கண்டவன்...

மற்: சரியாச் சொன்னீர்கள்...கல்லால் கூட்டம் கலைக்கும் கைவண்ணம் கண்டவன்.

---

ஒரு: என்மகனை பரிசோதித்துப் பார்த்துச் சொல்லுங்க

டாக்டர்: ஏன்... என்ன வருத்தம்

ஒரு: குலைப்பன் காய்ச்சல் மாதிரி ஒரு ருவிஸ்ட் காய்ச்சல் பரவியிருக்கு...

---

**சித்திர கானம்**




வார்த்தை தவறிவிட்டால் கண்ணம்மா
மார்பு துடிக்குதடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்துக் கற்பனைகள்

- வன்முறைக்குப் பயந்து வாக்களிப்பது ஜனநாயகமாகாது.
- பணத்திற்கு ஆசைப்பட்டு வாக்களிப்பது ஜனநாயகமாகாது.
- பணத்தால் தேர்தலில் வெற்றிபெறும்நிலை ஏற்பட்டுவிட்டால் அது ஜனநாயகமாகாது.
- வெளிநாட்டவர் தமது லாபம் கருதி ஒரு நாட்டில் தேர்தலில் பணம் செலவிடுவது ஜனநாயகமாகாது
- தேர்தலில் வெற்றிபெற்ற கட்சி தமது ஆட்சி. காலம் முழுவதும் முன்பு ஆண்டகட்சியைக் குறைகூறிக்கொண்டிருப்பது ஜனநாயகமாகாது,
- எதிர்க்கட்சி, ஆளும்கட்சியினர் நாட்டின் முன்னேற்றத்திற்காகக் கொண்டுவரும் நல்ல திட்டங்களைக் குறைகூறிய வண்ணம் இருக்கக்கூடாது.
- பொதுமக்களின் வாக்குப்பெற்று பதவிக்குவந்த பின்னர் தம்மக்களின் நலனிலேயே கண்ணும்கருத்துமாக இருப்பது ஜனநாயகமாகாது.
- கட்சிக்காகப் பணக்காரர்களிடம் பணத்தைவாங்கி பதவிக்காகப் பொதுமக்களிடம் வாக்கினை வாங்கிவிட்டு இருவரையும் மறப்பது ஜனநாயகமாகாது.
- வாக்களித்தவர்களுக்கு அளித்த வாக்கை அழிப்பது ஜனநாயகமாகாது.
- சிறுபான்மையினரை தனது சகோதரர்களாக மதித்து நடப்பதே சிறந்த ஜனநாயகமாகும்.



மகன்: அப்பா ஒரு சந்தேகம் எம். பி யிடம் ஆசிரியர் இடமாற்ற உதவிகேட்டது போல் கிரகங்களும் கடவுளிடம் இடமாற்றம் கேட்பதுண்டா?

அப்பா: அப்பப்பா... பொல்லாத கேள்வி·

# இந்து—லங்கா

சிங்கள இலக்கிய கர்த்தாக்களுக்குள் தமிழ் வாசகர்களுக்கு மிகவும் பரிச்சியமான ஒருவர் பராக்கிரம கொடுத்துவக்கு இவர் இந்தியாவையும் இலங்கையையும் சேர்ந்த கவிஞர்களின் தமிழ் கவிதைகளைச் சிங்களத்தில் மொழிபெயர்த்து 'இந்து சஹ லங்கா' என்னும் நூலை வெளியிட்டுள்ளார் எம். ஏ. நிஃமான், மஹாகவி, சபா ஜெயராசா, சண்முகம் சிவலிங்கம் ஆகியோரது கவிதைகளுடன் இந்தியக் கவிஞர்களான காமராஜன், மீரா சக்திக்கனல், புவியரசு ஆகியோரது கவிதைகளும இவற்றுள் அடங்குகின்றன. தமிழ், சிங்கள, முஸ்லீம் சமூகத்தினரிடையே சகோதரத்துவ ஒற்றுமையைக் கட்டியெழுப்ப இந்நூல் உதவுமென நம்பலாம்.

# மகுடி பிழை திருத்தம்

சி. பரமேஸ்வரன் கொக்குவில்

கே: ஆதாம் மனைவிக்கும் உன் மனைவிக்கும் உள்ளவேறுபாடு என்ன?

ப; ஆதாம் மனைவி ஏவாள்
என் மனைவி ஏவுவாள்.


சிரித்திரன் சரித்திரம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருபாலை வீடு



அது ஒரு பெரியவீடு.

பேர்ணூடா அல்பா — அகங்காரம், மிடுக்கு, வரட்டுக் கௌரவம், இவற்றின் உருவமான நடுத்தரவயதுமாது அந்த வீட்டின உரிமையாளர்.

அவளுக்கு ஐந்து பெண்கள் மூத்தவள் அங்குஸ்தியாஸ் அவளின் முதற் கணவனுக்கும், மற்றவர்கள் அவளின் இரண்டாம் கணவனுக்கும் பிறந்தவர்கள் எல்லாருமே திருமண வயதைத்தாண்டியவர்கள் கன்னிகள்

மூத்தவளுக்கே வயது 39 ஆகிறது.

பேசிவரும் திருமணங்கள் யாவும் 'அல்பா'வின் வரட்டுக் கௌரவத்தினுல் நழுவிப் போகின்றன.

'அல்பா'வின் கடைசிப் பெண்ணுக்கோர் காதலன் அவன் மூத்தவளான அங்குஸ்தியாவின் சொத்துக்களை அறிந்ததும் அவளையே திருமணம் செய்யமுன் வருகிருன் - இடையில் 'அல்பா'வின் நான்காவது மகளும் அவனையே தனக்குள் மானசீகமாக நேசிக்கிருள்.

இவர்களுடன் அல்பாவின் பைத்தியகாரத்தாய், இரு நடுத்தரவயது வேலைக்காரிகள் —

இவர்கள் அனைவரதும், உணர்ச்சிக் கொந்தளிப்புகள், குமுறல்கள், அபிலாஷைகள், ஏமாற்றங்கள், அங்கலாய்ப்புகள், பொருமைகள், போட்டிகள்... அந்த பெரிய வீட்டுக்குள் அடைபட்டு முட்டிமோத —

அது — 'ஒரு பாலை வீடாகிறது'

)ooo — — —o)o — — —ooo

ஸ்பானிய நாடகாசிரியர் 'லோர்க்கா' எழுதிய 'The House of Bernarda Alba' என்ற நாடகத்தை 'ஒருபாலை வீடு' என்ற கருத்தாழமான பெயரில் திருமதி நிர்மலா நித்தியானந்தன் தமிழ் வடிவமைத்து பிரதியாக்க, திரு க. பாலேந்திராவின் நேர்த்தியான நெறியாள்கையில் ஓர் அருமையான கலா தரிசனமாக அளித்தவர்கள் சுண்டிக்குளி பழையமாணவிகள் சங்கம்.

நாடகம் முழுவதும் — ஒவ்வொரு காட்சியமைப்பிலும் பாலேந்திராவின் நெறியாள்கை கவிதையாய் சுடர்விட்கிறது. நடிகர்கள் அனைவரும் கதாபாத்திரங்களாகவே வாழ்கின்றனர்.

குறிப்பாக 'அல்பா' பாத்திரமேற்ற திருமதி நிர்மலா நித்தியானந்தனின் மிடுக்கான, அமைதிமிக்க பாபரப்பற்ற நடிப்பே நாடகத்தின் ஜீவன்.

அடுத்தது அல்பாவின் கடைசிமகளாக நடிக்கும் சுமதி ராஜசிங்கத்தின் நடிப்பும் பேச்சும், அருமையான உயிர்த் துடிப்பாக இருந்தது.
ஒலி, ஒளி ஆகிய தொழில்நுட்ப அமைப்புகள் சிறப்பாக இருந்தது குறிப்பிடப்படவேண்டியதொன்று.

இவ்வளவு அழகான, வசதியான, காற்ருேட்டமிக்க, எதிரொலிக்காத நாடக அரங்கு யாழ்நகரில் இருப்பது நிறைவைத் தருகிறது.


தமிழ் கலைகளுக்கு புதுமையும், செழுமையும், மெருகும் ஊட்டிவரும் இலங்கை அவைக்காற்றுக் கழகத்தின் இயக்க பூர்வமான நடவடிக்கைகள் பெருமிதத்திற்குரியன நம்பிக்கையிழந்த பாத்திரங்களே நடமாடும் 'ஒரு பாலை வீட்டை'ப் பார்த்துவிட்டு வரும்போது எதிர்கால ஈழத்தமிழ் நாடகத்துறையைப் பற்றி புதிய நம்பிக்கைகளை வலுப்பெறச் செய்துள்ள திரு க. பாலேந்திராவுக்கும் அவரது குழுவினருக்கும் எமது பாராட்டுக்கள்

**ஆ. க. பராக்கிரமசிங்கம்**

**மைனர்**


**மச்சான்**

**'மாயன்'**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இ. ஸ்ரீகோபால், நாச்சிமார் கோவிலடி.

கே! தரப்படுத்தல் பற்றி உமது கருத்து?

ப: தரம் படுத்தால் என்னவாகும்.

☐ ☐

த. முருகானந்தன், தெல்லிப்பழை

கே; அன்றைய நாகரீகத்திற்கும் இன்றைய நாகரீகத்திற்கும் உள்ள வேறுபாடு என்ன?

ப; அன்றைய நாகரீகம் அரசனின் செங்கோலில் இருந்தது இன்றைய நாகரீகம் ரெயிலரின் கத்தரிக்கோலில் இருக்கின்றது.

☐ ☐

செல்வி ரமணி சிவஜோதி வவுனியா

கே: பெண்களுக்குப்பல்லைக் காட்டும் ஆண்கள் பற்றி உமதுகருத்து

ப: பல் டாக்டருக்குக் காட்டுவதில் சுகமுண்டு.

☐ ☐

செல்வி உஷாந்தி நாகராஜன் பருத்தித்துறை

கே; மகுடியாரே வேகமாக நடப்பதில் நீர் உலக சாதனை செய்தால் என்ன?

ப: விவேகமாக நடப்பதில் உலகம் முன்னேறும் என நினைப்பவன் யான்.

எஸ். எம். ஹமீட், யாழ்ப்பாணம்

கே; மகுடியாரே... பஸ் நிலையத்தில் உம்மைக் கவலையுடன் கண்டேன்.

ப: சில்லறைச் சில்லெடுப்பில் நின்றேன்

☐ ☐

செல்விஉலகநாயகி சுப்பிரமணியம் யாழ்ப்பாணம்

கே; கலை உணர்வில்லாதவன் கலை உலகில் பிரவேசித்தால்.

ப: குயிலின் நிறத்திலும் மயிலின் குரலிலும் கலைவண்ணம் காண்பான்.

☐ ☐

த. மதிவதனன் சாவகச்சேரி

கே; இன்று இலங்கையில் மிகவும் மலிவானது எது?

ப: பஸ் பிரயாணிகளின் உயிர்

☐ ☐

செ. குமாரவேல், திருநெல்வேலி

கே: மாநகரத் தேர்தலில் உமது வோட்டு யாருக்கு.

ப: ஆபாசமான கேள்வி தப்பி... திரைமறைவுச் சமாச்சாரத்தைச் சந்திக்கு இழுக்கலாமா

☐ ☐

வடிவாம்பிகை தம்பிராசா வல்வெட்டித்துறை

கே: உலகம் நிலையானது என எண்ணும் தத்துவஞானி யார்?

ப; ரயில் ஆசனம் தனது எனச் சொந்தம் கொண்டாடுபவன்

☐ ☐

ப. முத்துக்குமரன், நல்லூர்

கே: குடிகாரன் ஆபத்தானவனு?

ப! தண்ணிப்பாம்பு கடிப்பதில்லையே!

☐ ☐

உமாபதி ஸ்கந்தராஜா, புத்தூர்

கே: இமயமலையில் வெற்றிக் கொடிநாட்டிய தமிழன் இன்று என்ன செய்தான்?

ப: தமது கார்களில் கொடிநாட்டியிருக்கின்றுன்.

☐ ☐

ப. சாந்தலிங்கம், மல்லாகம்

கே; அன்றைய காதலுக்கும் இன்றைய காதலுக்கும் உள்ள வேறுபாடு என்ன?

ப: அன்றைய காதல் உடன் கட்டை ஏறியது. இன்றைய காதல் உடன்கோடுஏறுகிறது

☐ ☐

செல்வி புஷ்பதேவி சிவபாலன் உரும்பிராய்

கே: நீர்இந்நாட்டு ஜனதிபதியாக இருந்தால்?

ப: வறுமைக்கு வறுமை ஏற்படும்

☐ ☐

த. கனகசுந்தரம், வவுனியா

கே: கடவுளுக்கும் தமிழனுக்கும் உள்ள ஒற்றுமை என்ன?

ப; கடவுள் எங்கும் இருப்பார் தமிழன் எந்தக்கட்சியிலும் இருப்பான்.

☐ ☐

த. ராமசாமி, சாவகச்சேரி

கே: நீண்டநேரம் புதைகுழியிலிருப்பதில் உன்னல் சாதனைபுரிய முடியுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப: எந்த யாழ்ப்பரண பஸ்பிர யாணியாலும் சர்வசாதாரண மாகச் செய்யமுடியும்.

□ □

ம. தனபாலசிங்கம், அச்சுவேலி

கே; கல்வி எதற்கு?

ப: எம்மை உத்தமனுக்குவதற்கு உத்தியோகத்தனுக்கு வ தற் கல்ல.

□ □

நா. மகேந்திரலிங்கம், சங்கானை

கே: அழகுள்ள பெண்கள் தம்மை மேலும் அழகுபடுத்துவது பற்றித் தங்கள் கருத்து என்ன?

ப: தங்கத்திற்குத் தங்கமுலாம் பூசுவதைப் போன்றது.

● ●

க. கணபதி, கொடிகாமம்

கே; இனிப்பு எப்போ கசக்கின்றது?

ப: சர்க்கரை வியாதிக்கு ஊசி போடும்போது.

● ●

செல்வி மீனலோசனி தும்பளை

கே: எமது நாட்டில் எப்போது பசுமைப்புரட்சி ஆரம்பமாகும்.

ப: அது எப்போதே ஆரம்பமாகி விட்டது. எமது கோயில் கேணிகள் பாசியால் மூடியிருப்பதைக் காணவில்லையா.

● ●

சி. மனோகரன், உடுப்பிட்டி

கே: மனிதனுக்கு ஏன் இந்த மண் ஆசை.

ப: தாயானவள் கர்ப்பவதியாக இருக்கும்போது மண் உண்ட காரணமாக இருக்கலாம்

● ●

சி. செல்வராஜன் மட்டுநகர்

கே: அரசியல்வாதிக்கும் மனைவிக்கும் உள்ள ஒற்றுமை என்ன?

ப: இருவரும் ஓயாமல் புயல் கிளப்புபவர்கள்

□ ●

சே. யோகேஸ்வரன், முள்ளியவளை

கே: நீர் எப்போது இடிஇடி என்று சிரிக்கின்றீர்.

ப: 'ஜமக்' பிடித்து மண்வெட்டி பிடிப்பது மேல் என்று பேசும் போது.

● ●

ப. சபாநாதன் திருமலை

கே: இன்றைய தமிழ் திரைப்பட உலகின் கவலை என்ன?

ப; பெண்களை புதியகோணங்களில் படம் எடுக்கமுடியவில்லையே என்பது.

● ●

சி. பரமேஸ்வரன் கொக்குவில்

கே: ஆதாம் மனைவிக்கும் உன் மனைவிக்கும் உள்ளவேறுபர்டு என்ன?

ப; ஆதாம் மனைவி ஏவாள்
என் மனைவி ஏள்வுவா

● ●

சி. ஞானவேல், காரைநகர்

கே: நாய்க்கும் மனிதனுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: நாய் 'விசர்' வந்தால் மட்டும் வளர்த்தவனைக்கடிக்கும்.

● ●

சு. செல்லையா பளை

கே: நம் உற்பத்தியாளர் பொருத்தமில்லாத பெயர்களைத் தமது உற்பத்திப் பெருட்களுக்கு வைக்கின்றனரே...

ப: ஆம் தம்பி... அலாம் கடிகாரம் உற்பத்தி செய்தால் "கும்பகர்ணன் அலாம் குளொக்" என்றும் பெயரிடுவார்கள்,

செல்வி மனோரஞ்சிதம், நல்லூர்

கே; ஆசார ஆசான்கள் கலா தரிசனம் எவ்வண்ணம் இருக்கும்

ப: தாமரை மலர்கள் வடிகட்டிய நீரில் மலரவில்லையே என்று மூக்கைப்பிடிப்பர்.

● ●

ப. தனகுமார், கரவெட்டி

கே. இன்று உலகை ஆட்டுவது எது?

ப. எண்ணங்கள் அல்ல, எண்ணெய்.

● ●

க. தணிகாசலம் பரந்தன்

கே: யாழ்ப்பாணக்கள்ளு இனிதா

ப; பிற இடங்களிலிருந்து வண்டாகப் பறந்துவந்து ஒட்டகமாகவல்லவா குடித்துவிட்டு போகின்றனர்.

● ●

செல்வி கனகம்மா ராசையா, அச்சுவேலி

கே; மகுடியாரே...சிறுவர் ஆண்டு எப்படிக் கொண்டாடுவது நல்லது

ப: மூத்தோர் முன்மாதிரியாக வாழ்ந்து காட்டுவதே பெரும் சிறுவர் ஆண்டுக் கொண்டாட்டம்

● ●

சே. மகேந்திரன் கண்டி.

கே: கலை படைப்பது கஷ்டம்... அதைத் தாக்கி எழுதுவது சுலபம் அப்படித்தானே!

ப: ஆம்... சிலைவடிப்பது கஷ்டம் அதன்மூக்கொடிப்பது சுலபம்

● ●

மு. மணி பளை


கே: தனவான்கள் நம் நாட்டிற்குச் செய்த தானம் என்ன?

ப: சந்தானம். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி



பெயர்:

விலாசம்:

சரியான விடை தரும் அதிர்ஷ்டசாலிக்கு முதலாவது பரிசாக ரூபா 20/- வழங்கப்படும்.

இரண்டாவது பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிக்கு ஆறு மாத சிரித்திரன் இதழ்கள் இலவசமாக அனுப்பிவைக்கப்படும்.

விடைகள் யாவும் 20-5-79க்கு முன்பு 'குறுக்கெழுத்துப் போட்டி ஆசிரியர் சிரித்திரன் 559, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். (ஆ...ர்

**சென்ற இதழில் வெளியான போட்டியில் பரிசுக்குரியவர்**

நா. சிவலிங்கம்
சுரவந்தனை.
வல்வெட்டித்துறை.

## இடமிருந்து வரும்

1. செய்தொழில் தெய்வமாகின் சீவியம்?
3. புள்ளினங்களுக்கு அத்தியாவசியமானது.
5. கப்பல் திருப்பும் கருவி
7. சிவனை மறைந்த ஒரு ஈழத்து தமிழ் எழுத்தாளர்.
8. பலபெண்களுக்கு இதுவிருப்பமில்லை.
9. எழுத்தாளனுக்கு உபயோகமானது.
11. பெண்
12. குற்றவாளிக் கூண்டில் நிற்பவன் இதன்படிதான் எல்லாம் நடக்கும் என்று நினைப்பது நியாயம்.
14. இதன்மேல் ஏறுவது சிலருக்குப் பொழுதுபோக்கு
15. இளந்தென்றல் தரும் சுகத்தை இது தராது.
16. இதன் விரோதி மது.
17. இனம் இனத்தோடுதான் ——
18. இது ஒருவருக்கு அதிகமாக உண்டாகின்றது அவரின் தேகசுகத்தையே பாதிக்கும் என்று உளநூல் வல்லுநர்கள் கூறுவார்கள்

## மேலிருந்து கீழ்

1. தலை
2. இது இறந்தவர்கள் மேல் நாம் அனுதாபம் காட்ட வேண்டும்.
3. புன்சிரிப்பு
4. கலப்பைக் கூர்
6. இது இரண்டும் ஒருவனுக்கு உபயோகமற்றவையாகின் அவன் வாழ்வது மிகவும் கஷ்டம.
8. இது கிடைக்கும் என்று நம்பி சோம்பேறிகளாக இருப்பவர்கள் ஏராளமானோர்.
9. செருக்கு
10. ஒரு பெரியார் வாழும்போது நாம் கௌரவிக்காமல் இறந்தபின் இதுசெய்து என்ன பயன்,
11. கோயிலின் வாசலில் கட்டப்பட்டிருப்பது.
13. ஒரு நல்ல அரசியல்வாதி மக்களுக்காக இது செய்தல் வேண்டும்.
16, கைம்மாறு



தலைமை ஆசிரியர்! ஐயா சமூகக் கல்வி ஆசிரியரே! இம்முறை க. பொ. த.சாதரணம் பரீட்சையில் மாணவர்கள்மிகக்குறைவான புள்ளிகள் சமூகக் கல்வியில் பெற்றிருக்கிறார்கள்! இது ஏன்?

சமூகக்கல்வி ஆசிரியர்: ஐயா, தற்போது டியூட்டரிகளில் இந்தப்பாடத்தை ஆசிரியர் மிகுந்த கவனம் எடுத்துப் போதிக்கிறார்களில்லையே!

—துனுக்கன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனோரங்கம்
## மேகலை

24-3-79 மாலை நாட்டிய ஆர்வலர்களின் இதயத்தில் மகிழ்ச்சி என்னும் மாலையைச் சூட்டியது. அவைக் காற்றுக் கலைக் கழகத்தின் மாதாந்த நிகழ்ச்சித் தொடரின் 4-வது நிகழ்ச்சியாக செல்வி ரங்கா விவேகானந்தனின் 'நர்த்தனக் கோலம்' என்ற நாட்டிய நிகழ்ச்சி நடைபெற்ற மாலைப் பொழுதைத்தான் நான் குறிப்பிடுகிறேன்.

புகழ்பெற்ற நாட்டிய தாரகையான அவர் 'குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்புமாக மேடையிலே தோன்றி 'எடுத்த பொற்பாதத்தை' தாளத்துக்கு ஏற்ப அங்கும் இங்கும் வைத்து ஆட நாட்டிய ரசனையில் லயித்துப்போய் இருந்த எனது இதயமும் ஆடத் தொடங்கிவிட்டது,

'மனமுந்தியதோ விழிமுந்தியதோ, கரமுந்தியதோ, என ஐயுறும் வண்ணம் அவர் பாவங்களை, அசைவுகளை முத்திரைகளை அப்படியே தத்ரூபமாக நடித்துக்காட்டி ரசிகர்களின் ஏகோபித்த கரகோஷத்தைப் பரிசாகப் பெற்றுக்கொண்டார். அவரது நாட்டியத் திறமைக்குக் கட்டியம் கூறுவன போல் கால்சில்ம்புகள் சரிசரி சரி யெனவே சலங்கைகள் ஒலித்தனவே.

மெல்லுணர்வுகளை அவர் நடித்துக் காட்டும்போது அப்படியே எனது இதயத்தில் இளந்தென்றல் இன்ப நடை பயின்று இதமூட்டிக் கொண்டிருந்தது. 'மகிஷாஷனி, மர்த்தனி' என்ற இறுதி ஆட்டத்தில் அவர் கோபா வேசயாகக் கொதித் தெழுந்து, சண்டமாருதமெனச் சக்கரமாகச் சுற்றிச் சுற்றித் தாண்டவமாட எனது உடலெல்லாம் ஒரு வீர உணர்விலே உந்தப் பட்டுப் புளகாங்கித மடைந்தன.

தாம்பாளத்தில் கால்கள் இரண்டையும் வைத்து பாவங்களை முகத்தில் தேக்கி மெல்லிய அசைவுகளை உடலிலே காட்ட அந்த அசைவுக்கு இசைவுதந்து அவரது பாதச்சதங்கை இன்பக் கவிபாடி ஒலியெழுப்ப பார்த்துப் பூத்துப்போய் இருந்த எனது உடலும் அவரது உடலோடு போட்டி போட்டுச் சிலிர்த்துக் கொண்டது.

எல்லாவற்றையும் விஞ்சும் வகையில் பந்தாட்டம் —மோகினி ஆட்டம் என்ற நர்த்தனம் உள்ளத்தைக் கொள்ளை கொண்டுவிட்டது. வெகு அநாயாசமாக அந்த ஆட்டத்தை அவர் ஆடிக் கொண்டிருந்தார். அந்தப் பந்தாட்டம் என்னை அப்படியே குற்றாலக் குறவஞ்சி நூலில் வசந்தவல்லி பந்தாடும் இடத்தோடு ஒன்றவைத்தது.

செங்கையில் வண்டு கலின்கலி னென்று செயஞ்செய
மென்றாட இடை
சங்கத மென்று சிலம்பு புலம்பொடு தண்டை
கலந்தாட இரு
கொங்கை கொடும்பகை வென்றனமென்று குழைந்து
குழைந்தாட மலர்ப்
பைங்கொடி நங்கை வசந்த சவுந்தரி
பந்து பயின்றனளே.


என்ற பாடல்தான் நினைவிலே அலைமோதி ஆர்த்தெழுந்து நின்றது. நீண்ட நாட்களின்பின் ஒரு நல்ல நாட்டிய நிகழ்ச்சியைப் பார்த்ததில் எனது உள்ளம் ஒரு சுற்றுப் பெருத்து விட்டது என்றால் அது எப்படி மிகையாகும்.



## HAPPY BIRTHDAY To you

நான் பிறந்த தினத்தன்று ரேடியோவில் அப்பா, அம்மா எல்லோரும் வாழ்த்துவதாகக் கூறுகிறார்கள். அதற்குப்பிறகு எனக்கு அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதையும் அல்லவா ஒலிபரப்பவேண்டும்.

—ஒரு அடிவாங்கும் குழந்தை



## கல்யாண சாப்பாடு

ஒரு கஞ்சப்பேர்வழி பின்வருமாறு நண்பனிடம் கூறினான். எனது மகனின் கலியாணத்தன்று வீண் செலவு பண்ணாமல் பணத்தை மிச்சம் பிடித்தேன் நண்பன் அதிசயப்பட்டு எப்படி என்று கேட்டான் கஞ்சப் பேர்வழி கலியாண தினத்தன்று போயா நாள். மதுபானக்கடைகள் இல்லை. இதனால் விருந்தாளிகள் ஏமாறினார்கள் அன்றைய தினம் சிகரட் ஸ்டிரைக். இதனால் மிச்சம். அன்றையதினம் படக்காட்சி இல்லை. அப்பணங்களை வாழ்த்துப் பணமாக கொண்டுவந்து செலுத்தினார்கள்.' என்றான்'

—கௌரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிக்காதீர்கள்...!

# கொலை!

இரவு பத்தரை மணியிருக்கும்...
நானும் எனது நண்பனும் படத்துக்கு போய் விட்டுத் திரும்பிக் கொண்டிருந்தோம். மெக்கானிக் கோபால் வீட்டினை நெருங்கியதும் அந்த அவலக்குரல் கேட்டது.
''ஐயோ... ஐயோ... என்னை விட்டுடுங்கே...'
நாங்கள் திடுக்கிட்டு ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டோம்...
''ஐயோ... என்னைக் கொல்லாதேங்கோ...''
மீண்டும் அதே அவலக்குரலைத் தொடர்ந்து ஏதேதோ உருண்டு விழுந்து நொருங்கும் சப்தங்கள்,
''உன்னைக் கொன்றால்தான் எனக்கு நிம்மதி இண்டைக்கு இரண்டிலே ஒன்று பாக்கிறன் அந்த முரட்டுக்குரலை கேட்டதும் எனக்கு விஷயம் விளங்கியது. மெக்கானிக்கோபால் தான் வெறியில்வந்து மனைவிக்கு அடிக்கிறான் முரட்டு மூதேவி...
ஐயோ... ஐயையோ... என்னைக் கொல்லாதேங்கே...'' அந்த இரவின் அமைதி குலைந்த படி அந்த அவலக்குரல் தொடர்ந்தது.
''நான் நண்பனிடம்'' பாவம் அந்தப்பெண் இந்த முரட்டுச் சனியன் கொல்லப்போறான் வா சமாதானம் பிடிப்போம்... ''என்றபடி அந்த வீட்டின் கதவை போய் தட தட வென்று தட்டினேன். உள்ளே அவலக்குரல் தொடர்ந்தது. அவர்கள் போடும் சத்தத்தில் நாங்கள்தட்டியது எங்கே கேட்கப்போகிறது
''ஐயோ... கொலை... கொலை...''
யோசிக்க நேரமில்லை... தாமதித்தால் அந்தப் பெண் இறந்துவிடுவாள்.
மறுவினாடி வீட்டுமதிலில் துள்ளிஏறிஓட்டினை பிரித்துக்கொண்டு உள்ளே பார்த்தோம்... அங்கு எவரும் இல்லை அமைதி நிலவியது நாம் ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டோம். மீண்டும் - திடீரென்று ஒருகுரல் கேட்டது.
—''இதுவரை... ஒரு அபலைப்பெண்'' என்ற நாடகம் கேட்டீர்கள்... நிறுத்த மறந்து உறக்கத்தில் ஆழ்ந்திருந்த வீட்டுக்காரர்கள் மத்தியில் மேஜையில் தனியாக இருந்த வானொலிப்பெட்டியிலிருந்துஒலித்தஇலங்கை வானொலி அறிவிப்பாளரின் குரல் எங்களை கிண்டல் செய்வது போலிருந்தது.
ஐயோ இலங்கை வானொலியே...



சர்வதேச குழந்தைகள் ஆண்டை பெரியவர்களான நாமும் கொண்டாடுகிறோம்.
எப்படி?
கடைகளில் பத்துச்சதம் ஐந்துசதம் மீதிப்பணம் தர இல்லையென்று இனிப்புகள், சொக்லேட்டுகள் எங்களுக்கு தருகிறார்கள் இப்போது.

## ராஷ்ய நகைச்சுவை

மரத்தில் உள்ள பழங்களைத் தோட்டக்காரன் பறிக்க வந்தபோது, ஆப்பிள் கனிஒன்று இலைகள் மறைவில் ஒளித்துக்கொண்டது, மனிதர்கள் கையில் அகப்பட்டால் தன்னை 'ஜாம்' ஆக்கி விடுவார்களோ, ஜூஸ் தயாரித்து விடுவார்களோ என்று பயம்,

அது எப்படியோ தோட்டக்காரன் கையில் சிக்காமல் தப்பித்துக்கொண்டது.

இப்போது அதன் பயமெல்லாம். தான் அழுகிப் புழு புழுத்துப் போகாமல் இருக்கவேண்டுமே என்பது தான்.



என்ன உங்கள் கட்டிலில் ஏழெட்டு பெட்சீட்டுகள் விரித்திருக்கிறீர்கள்.
அடியில் விரித்திருப்பது சிங்கப்பூர் பெட்சீட் அது அழுக்குப் படாதிருக்க மகன் அனுப்பிய ஈரான் பெட்சீட், அது பழுதாகாமலிருக்க இந்திய பெட்சீற் இப்படி என் மனைவி விரித்திருக்கிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு திருடன்

அவன் ஒருபயங்கரத்திருடன்

ஆருமற்ற சமயத்தில் அந்த வீட்டுள் நுழைந்து அகப்பட்டதைச் சுருட்டி மூட்டை கட்டிக்கொண்டான்.

அவனுக்குப் பசித்தது,

குசினியறையில் ஏதாவது கிடைக்குமா என்று பார்த்தான்.

சாப்பாட்டு மேசையில் பலவகைப் பலகாரங்கள் வைக்கப்பட்டிருந்தன.

ஆவலுடன் அமர்ந்து சாப்பிட ஆரம்பித்தான் ஒரு கணந்தான் —


அவனுள் ஏதோ ஓர் உணர்வு. மறுகணம் அவன் கண்கள் பனித்தன —

மேசையில் கிடந்த பேப்பரையும் பேனையையும் எடுத்து ஏதோ எழுதி திருடிய பொருட்களுக்கருகில் வைத்துவிட்டு, வந்த சுவடே தெரியாமல் போய்விட்டான்.

அந்தக்கடிதத்தில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது.

"திருடத்தான் வந்தேன்; பசி ஏற்பட்டதால்சாப்பாட்டு மேஜையில் உள்ள பலகாரங்களை சாப்பிட்டேன்; அவற்றின் சுவை எனக்கு என் தாயை நினைவு படுத்தி விட்டது, திருடிய பொருட்களை அப்படியே வைத்துவிட்டுப் போகின்றேன். என்னை மன்னிக்கவும். ———

— சாம். அரசரத்தினம்



ஆசிரியர்: கியூ வரிசையை ஞாபகப்படுத்தும் தேசமொன்றைச் சொல் பார்ப்போம்

மாணவன்: கியூபா.

— மனோ

## SOME பந்தி

Some பந்திகளை இருத்தி சாப்பாடு போடுவதால்தான் சம்பந்தி என்று பெயர் வந்ததோ!





"அகளங்கன்"

'சான்றோர் கவி' எனப்பரந்து விரிந்து கிடக்கிறது கோதாவரி நதி. நதிக்கரையிலே கோமகன் இராமனும் கோதை சீதாபிராட்டியும் இயற்கை அழகை ரசித்து இன்ப வெள்ளத்திலே மிதந்து கொண்டிருக்கின்றனர். மலர்களிலே மணமெடுத்து வீசும் மந்தமாருதம் இருவரது மனதையும் மயக்கி மகிழ்வூட்டுகின்றது.

கோதாவரியின் அழகிலே மெய்மறந்து களித்திருந்த இராமனின் புருவங்கள் சற்றே விரிவடைகின்றன. இராமனின் கண்களிலே ஓர் அழகிய அன்னப்பறவை தென்படுகின்றது. நீண்ட நேரமாக அன்னப் பறவையின் நடையைக் கூர்ந்து கவனித்த இராமன் அன்னப்பறவை சீதையைக்கண்டு மெல்ல ஒதுங்குவதைப் பார்த்துப் பரவசமடைந்து தனது பார்வையைத் திருப்புகிறான். அவனது பார்வை சீதையின் முகத்திலே பதிகின்றது.

அன்னம் அழகாக நடந்து வந்தபோது அது சீதையின் நடையை ஒத்திருந்த அதிசயத்தைப் பார்த்து நுணுகி ஆராய்ந்த இராமன், அன்னம் தானாகவே தோல்வியை ஏற்றுக்கொண்டு ஒரு ஓரமாக ஒதுங்குவதைக் கண்டதும் சீதையை நோக்கி முறுவல் செய்கின்றான். சீதையின் நடைக்கு அன்னம் ஒப்பில்லை என்பதை எதிர்பார்த்திருந்ததால் இராமன் சிறிதாகவே முறுவல் செய்கின்றான்.

இந்த முறுவலின் அர்த்தத்தைப் புரிந்துகொண்ட சீதை சமயம் பார்த்து தானும் முறுவல் பூக்கிறாள். ஒருகரையிலே வந்து தண்ணீர் குடித்துத் திரும்புகின்ற யானையைப் பார்த்து, கண்களை மெள்ளத் திருப்பி இராமனைப் பார்த்து, கண்களால் காவியம் சொல்லி இளநகை செய்கின்றாள். இராமனின் முறுவலுக்கு அர்த்தம் விழுங்கிவிட்டது. என்பதை யானைமூலம் தான் இராமனுக்குக் காட்டிய மகிழ்ச்சியில் அவளது முறுவல் 'புதியதோர் முறுவலாக' இருக்கின்றது.

பார்வையிலே அவர்கள் படித்த பாடத்தை இதோ பாடலில் நாம் படிப்போம்.

ஓதிமம் ஒதுங்கக் கண்ட
உத்தமன் உழையளாகுஞ்
சீதைதன் நடையை நோக்கிச்
சிறியதோர் முறுவல் செய்தான்
மாதவள் தானு மாண்டு
வந்துநீ ருண்டு மீளும்
போதகம் நடப்ப நோக்கிப்
புதியதோர் முறுவல் பூத்தாள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறையா மறை!

இந்துமத குருவாகத் தோன்றி ஆஸ்திக வானில் துருவ நட்சத்திரமாக ஒளி வீசிப் பிரகாசித்த திரு. கைலாசநாதக்குருக்கள் அவர்களின் மறைவு இந்து மக்கட்கு மட்டுமின்றி பிறமதத்தோருக்கும் பிற தேசத்தவர்க்கும் ஒரு இழப்பாகும். வேதமோதுதல் வேதியர்க்கழகு என்ற மொழிக்கமைய நின்று இளமை தொட்டு ஆகமவிதிகளின்படி படியேறி இந்துமதபீடாதிபதி என்ற பீடத்தை அடைந்தவர். அவர் வாழ்க்கையில் நடந்த சம்பவம்பல, வடமேல் மாகாணமொன்றில் உள்ள நாட்டுக்கோட்டை நகரத்தாரின் கோவிலுக்குக் குருக்களவர்கள் கும்பாபிஷேகம் நடாத்த வந்திருந்தார் தனது குழுவினருடன். கும்பாபிஷேகத்தின் சில தினங்கள் முன்பேவந்து தங்கிய அவர் சாதாரண ஒற்றைத்துண்டுடன் நின்றபடி யாகசாலைகளையும் கும்பங்கள் முதலியவற்றையும் ஏதும் பிழைகள், குறைபாடுகள் இருக்கிறதாவென அவதானித்தார். அச்சமயம் ஒருசில சிங்கள இளைஞர்கள் அங்குவந்து யாகசாலைகள் தூபிகளில் வடித்த பிம்பங்கள் ஆகியவற்றைச் சுற்றிப் பார்த்து வியந்தனர். அவ்வழியே வந்த அவர்கள் ஒற்றைத்துண்டுடன் நீராடச்செல்ல ஆயத்தமாய் நின்ற அவருடைய தோற்றத்தைக்கண்டு உள்ளே பரிகாசமாக எண்ணிச் சிரித்தபடி போனார்கள், மறுநாள் மேளவாத்தியத்தின் ஒலிகேட்டு அதே இளைஞர்கள் ஓடோடி வந்தார்கள், (அக்கோவிலில் நீண்டகாலமாக மேளவாத்தியத்தையே அவர்கள் காணவில்லை.) மேளச்சத்தம் ஓய்ந்ததும் குருக்களவர்கள் மந்திரங்களை ஓதத் தொடங்கியதும் கோவிலெங்கும் ஒலித்தன. ஒலி பெருக்கியைக் கூடப்பொருட்படுத்தாது அவர் நாவில் அட்சரசுத்தமாக வடமொழிச் சொற்கள் பறந்துகொண்டிருந்தன. நாமகள் நாவில் நடனமாடினாள், வடமொழி பெரும்பாலும் சிங்கள மொழியிலும் நிலவுவதால் மந்திரங்களின் அர்த்தங்களை ஓரளவு உணர்ந்து கொண்ட அவ்விளைஞர்கள் உடனே தமது கையிலுள்ள சிகரட்டுகளை வீசிவிட்டு உள்ளேவந்து கால், கை கழுவி பூசை முடியும்வரை முழந்தாளில் மண்டியிட்டு ஐம்புலனுமடக்கி வந்தித்தார்கள். பூசைகள் முடிந்த மறுநாள் தமது குடும்பத்தவருடன் வந்து கும்பாபிஷேக திரவிய முதலானதும் கொடுத்துதவினார்கள். குருக்களவர்களிடம் மேலும் செய்யவேண்டியதென்ன வெனக்கேட்டறிந்து அவர் ஆணைப்படி கோவிலில் கும்பாபிஷேகம் முடிந்ததும் அன்னதானமும் செய்தனர். எனவே இந்துசமயத்துக்கும் பிறசமயத்துக்கும் பாலம்போல விளங்கிய அன்னார் விண்ணுலக யாத்திரை அடைந்தது முடிவுறாத் துயரமாகும். அவர் கரங்களால் கும்பாபிஷேகம் நடாத்தப்பெற்ற கோபுர கலசங்களும் விண்ணைநோக்கி ஏங்குகின்றன.

சர்மா



சகோதர சகோதரிகளே பெரியோர்களே!

எங்கள் கிராமத்தில் வாசிகசாலை, பள்ளிக்கூடம் இவற்றுக்கு நமது பிரபல வர்த்தகர் பத்தாயிரம் ரூபா பதுக்கி வைத்திருக்கிறார், மன்னிக்கவும் ஒதுக்கி வைத்திருக்கிறார்

—ச. ரா. பா.

காதலுக்குக்கண் இல்லை என்பது சரிதான்.

ஏன்?

நம்ம லேடி ஸ்டெனோவிடம் பேசிக்கொண்டிருக்கும் சமயம் எனது இன்கிரிமென்ட் ரிபோட்டை நீட்டினேன். மானேஜர் கையெழுத்துப் போட்டுவிட்டார்.



## விஞ்ஞானிகளின் வாழ்வில் நகைச் சுவை

விஞ்ஞானி தோமஸ் அல்வா எடிசன் மறதிக்கு பேர் போனவர், திருமணநாள் மாலையே அவர் புது மனைவியைப் பின்னர் சந்திப்பதாக கூறிவிட்டு ஆய்வ கூடத்திற்கு வந்துவிட்டார். நடு இரவில் ஒருவர் வந்து நினை ஊட்டிய பின்னரே தனக்கு அன்று திருமணம் நடந்தது என்பது அவருக்கு நினைவு வந்தது.

இன்னோர் சம்பவம்:- எடிசன் ஒருமுறை வரிப்பணம் கட்டுவதற்காக கியூவில் நின்றார். அவரது முறைவந்தது கிளார்க் "உங்கள் பெயர் என்ன?" என்று எடிசனைக் கேட்டார். எடிசன் விழித்தார், அவர் தனது பெயரை மறந்து விட்டாக. அவருக்குப் பின்னால் நின்ற ஒருவர் "நீங்கள் எடிசன் அல்லவா!" என்று சொன்ன பின்புதான் அவருக்குப் பெயர் ஞாபகம் வந்தது.

தொகுப்பு — கனக. சுகுமார்



அந்தப்புதிய வீட்டை வாடகைக்கு எடுத்துவிட்டு பிறகு ஏன் காலிபண்ணினாய்

சுவர்களில் எப்படியடித்தாலும் ஆணி ஏறவில்லை அதுதான்.

—கௌரி



# இலக்கியத்தில்

# நகைச்சுவை

நா. தர்மராஜ்

இன்றும் தமிழ் சினிமாவில் சண்டைக் காட்சிகள் வரும் இடங்களில் நகைச்சுவை இடம்பெறுவதும் ஒரு மரபாக இருக்கிறது. பழயதமிழ் இலக்கியங்கள் பலவற்றிலும் சண்டைக் காட்சிகளை கவிஞர் பாடும்போது வீர உணர்வோடு நகைச்சுவை உணர்வையும் கலந்து இழையோட விட்டிருப்பதைக் காணலாம். இங்கு இந்தக்கட்டுரையில் இராமாயணத்தில் ஒருபோர்க் களத்தில் எப்படி நகைச்சுவை இடம் பெறுகிறது என்பதை ரசிப்போம்.

மூக்கறுந்த சூர்ப்பனகையின் மூக்கறுந்த நிலையை அறியாத கரன் என்னும் அவளது சகோதரன் தனது பெரும் படையுடன் வந்து இராமனுடன் போராடுகின்றான். கரன் இராவணனுக்கு தம்பி என்பதையும் ஞாபகப் படுத்தவேண்டும்.

போரில் கரனின் சேனை இராமனின் அம்புகளுக்கு ஆற்ருது சிதறியோடுகிறது. இராம பாணங்கள் அரக்க வீரர்களின் தலைகளை அறுத்து விழுத்திவிட தலையில்லா முண்டங்கள் நின்று கூத்தாடுகின்றன. இதனை கவந்தம் ஆடுதல் என்று இலக்கியங்களில் கூறுவார்கள்.

இராமனின் அம்புகளுக்கு ஆற்ருது தலைதெறிக்கச் சிதறியோடும் அரக்கர்கள் யானைகளின் வயிறுகளிலே இராமனின் அம்புகள் துழைத்து குகையாக இருக்கும் மறைவிடங்களில் வாளோடு சென்று மறைகின்றனர் அப்படி ஒடிஒழிக்க எண்ணங்கொண்டு வரும்சில அரக்கர்கள் தலையில்லாமல் நின்ருடும் கவந்தத்தைப் பார்த்து தங்கள் கைகளை தமது த்லைமேல் வைத்து வணங்கி, நண்பனே! நாங்கள் இந்த வழியாகப் போனேம் என்று இராமனிடம் கூறிவிடாதே. எங்களைக் காணவில்லையென்று கூறு என்று கூறுகிருர்கள்.

அவசரமாக பயந்தோடும் வீரர்கள் தலையில்லாத முண்டத்தை கும்பிட்டு, தம்மைக் காட்டிக் கொடுக்க வேண்டாமென்று இறைஞ்சுவது எத்தனை உயர்ந்த காஸ்ய ரசமாக இருக்கிறது. அரக்க வீரர்களின் பதட்டத்தையும், பயத்தையும் அவசரத்தையும் எவ்வளவு அழகாக கீழே தரும் நகைச்சுவைப்பாடல் மூலம் கம்பர் விழக்குகிருர் பாருங்கள்

,'மண்டியோடினர். சிலர்நெடுங் கடகரி வயிற்றுப்
புண்டிறந்தமா முழையிடை வாளொடும் புகுவார்
தொண்டை நீங்கிய கவந்தத்தைதந் துணைவநீ எம்மைக்
கண்டிலேனெனப் புகலெனக் கைதலைக் கொள்வார்'



சீடன்; குருதேவா

குருஜி: அப்பனே

சீடன்: மனிதனுக்கு சலரோகம்... அதாவது சர்க்கரை வியாதி வருவதன் காரணம் யாதோ?

குருஜி; மனிதன் இனிப்புவகை அதிகமாக உண்பதால் அவன் அந்த வியாதியால் அவஸ்தைப்படுகின்ருன்.

சீடன் எறும்பாகிய ஜீவசெந்து இனிப்பு நிறையஉண்கின்றதே. அதற்கு ஏன் சர்க்கரை வியாதிவருவதில்லை!

குருஜி; எறும்பு மனிதனைப்போல் இனிப்பு உண்டுவிட்டு உறங்குவதில்லையே!

---

## இடி அமீனும் நடிகர் ரஞ்சனும்

சந்திரலேகாவில் பட்டத்துக்குரிய தனது அண்ணனைக்குகையில் அடைத்துவிட்டுப் பெற்ருேரையும் பாதாளச்சிறையில் அடைத்துவிட்டு இளவரசனுக நடிக்கும் ரஞ்சன் ராஜமகுடத்தைத் தூக்கித் தன்தலையில் தானே தரித்து கொள்ளும் சமயம் கைதட்டி ஆரவாரம் செய்யாதிருந்த சபையோரைப் பலாத்காரமாகக் கைதட்டவைத்து முடிசூடினுன். அப்படியே இடிஅமீனும் ஒரு இடத்தில் தனது சிலையைத் தானே திறந்துவைத்துக் கொண்டாடினுர்.

---

உடம்பு இளைக்க ஏதாவது ஒருவழி சொல்லுங்கள்.

தினசரி நடவுங்கள்

எங்கே இதற்கு நேரம்? காலை ஆபீஸ்புறப்பட்டு மாலை வீடுவந்து விட்டால் வீட்டில் வேலைகளுடன் சரி.

ஒரு நூறுரூபா கை மாற்று எனக்குத் தந்து பாருங்கள் தினசரி நடப்பீர்கள்.



ச. ரா.பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க சிரித்திரன்

சிரித்திரன் பத்திரிகை கண்டேன். அதில் ச. ரா. பாலகிருஷ்ணசர்மாவின் வடக்கே போகும் ரயில்'' என்றகதை நன்ருக இருந்தது. இடி அமீன் அவர்களுக்கு என்ற போடாதகடிதம் வயிறு குலுங்க எம்மை சிரிக்கவைத்தது. அவ்வப்போதுவரும் ஈழத்தில் வெளியாகும் சிரித்திரனை நானும் நண்பர்களும் படிக்கத் தவறுவதில்லை. வாழ்க சிரித்திரன். சிரித்திரனை எனது பேனுநண்பி மூலம் பெறுகிறேன்.

என். வேலாயுதம், பீ. ஏ.
கிருஷ்ணுபுரம்
மதுரை, தமிழ்நாடு

## பிறந்தநாள் இன்று பிறந்தநாள்

காலை வானொலியில் பிறந்தநாள் நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது, அப்பொழுது எனது நண்பன் கூறினன். ''ஆங்கிலேயரின் பழக்கமான பிறந்தநாள் கொண்டாடுதல்' இன்று தமிழர் மத்தியில் நன்கு பரவி விட்டது.'' என்று.

உண்மை அதுவல்ல இந்தப் பழக்கம் தமிழரிடையே தொன்றுதொட்டு நிலவி வருகிறது. 'ராஜராஜ சோழனின் காலம் தமிழர் சரித்திரத்தில் ஒரு பொற்காலம் என்பார்கள். அந்த 'ராஜராஜ சோழன்' ஒவ்வொரு ஆண்டும் ஐப்பசியில் வரும் சதய நட்சத்திர நாளை தனது பிறந்த நாளாகக் கொண்டாடினன் என்று ஆராய்ச்சிக் குறிப்புகள் கூறுகின்றன.

### தகவம் - சிறுகதைத்துறை

## ஊக்குவிப்புப் பணி


தமிழ்க் கதைஞர் வட்டம் (தகவம்) இலங்கையிலே 1978, நான்காம் காலாண்டுப் பகுதியில் வெளிவந்த சிறுகதைகளுள் 'பிடிவாதக்காரன்' என்னும் கதையைச் சிறந்தது எனத் தேர்ந்தெடுத்துள்ளது. திரு. அன்ரனி மனேகரன் புனைந்த இக்கதை ஈழநாடு 17-12-78 இதழில் வெளிவந்திருக்கிறது.

அன்ரனி மனேகரன் அவர்கள், மேற்குறிப்பிட்ட சிறுகதையைப் புனைந்தமைக்காக தகவம் வழங்கும் 25-00 ரூபா பரிசையும், பாராட்டையும் பெறுகின்ருர்.

அன்ரனி மனேகரனது எழுத்தாற்றல் மேன்மேலும் பரிமளிக்க நாம் எல்லோரும் அவரை வாழ்த்துவோமாக

இந்த மதிப்பீட்டில் இரண்டாவது, மூன்ருவது இடங்களைப் பெறும் சிறுகதைகள்:

2. எல்லைக்கோடுகள் — தெணியான் — மல்லிகை
3. நினைவுகளுக்கு அப்பால் —சொக்கன் —சிந்தாமணி







மில்க்வைற் அப்பியாசக் கொப்பி

100 மில்க்வைற் நீலசோப் அல்லது
25 மில்க்வைற் பார்சோப் அல்லது
10 மில்க்வைற் 1 இரு. பெட்டி சலவைப்பவுடர் அல்லது
50 நியூ மில்க்வைற் சோப்

மேலுறைகளை அனுப்பி மேற்படி
அப்பியாசக் கொப்பியை
பெற்றுக் கொள்ளுங்கள்.

மில்க்வைற் — யாழ்ப்பாணம்

கிளை:- 79 மெசஞ்சர் வீதி, கொழும்பு-12
தொலைபேசி: 36063

தொலைபேசி: 7233,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



லண்டனில்

# ஒரு தமிழ்ப்பெண் எழுத்தாளர்

■ ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்துடன்.

● ஒரு உரையாடல்

பல மாதங்களுக்கு முன்னர் 'சிரித்திரனில்' ஒரு சிறுகதை வெளியானது.

கதை வெளியானதைத் தொடர்ந்து அதுபற்றி பலதரப்பட்ட விமர்சனங்கள் கண்டனங்களாகவும், பாராட்டுக்களாகவும் வருகின்றன.

தொடர்ந்தும் அந்த எழுத்தாளரின் கதைகள் பிரசுரமாகின்றன. எல்லாமே பிரச்சனைக்குரியவைதான்.

இப்படிப் பிரச்சனைக்குரிய கதைகளை எழுதி பிரச்சனைக்குரிய எழுத்தாளராகத்திகழும் லண்டன் வாழ் தமிழ் பெண் எழுத்தாளரான திருமதி ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் அவர்கள் கடந்த மாதம் சிரித்திரன் அலுவலகத்திற்கு வந்திருந்தார். அவருடன் சிறிது நேரம் உரையாடியபோது ஒரு எழுத்தாளருக்கே உரிய 'ராங்கி'யும் உறுதியுமிக்க தொனியில் அவர் கூறிய கருத்துக்கள் சுவையானவை. சிந்திக்கத் தகுந்தவை.

பிரச்சனைகளுக்குப் பயந்து, எழுதியாக வேண்டிய பிரச்சனைகளை எழுதாமல் ஒரு எழுத்தாளனுல் இருக்கவே முடியாது அப்படியிருந்தால் எந்தக்கலையும் வளராது.

''நம்முடைய எழுத்தாளர்கள் பலரும் ஒன்று அதீத கற்பனுவாதிகளாக இருக்கிறுர்கள் அல்லது அரசியல் வரட்டு வேதாந்தங்களாலும் எழுத்தாளன் அழிந்தே போவான்.

''இன்றைய மேற்கத்திய மக்களுக்கு எல்லாமே வசதியாகக் கிடைக்குமளவிற்கு எல்லாவற்றிலும் வளர்ந்த நிலையில், அவர்களின் மனம் இல்லாததை கற்பனையில் கண்டு 'மகிழ்கின்ற ஒரு விசித்திர மனே உணர்வு கொண்டவர்களாக இருக்கிறுர்கள் இந்த வெளிப்பாடே அவர்களின் இன்றைய கலை இலக்கியப் படைப்புகளில் மேலோங்கி நிற்கிறது.''

'நமது சமூக 'அமைப்பு மிகவும் குறைபாடுள்ளது. அதில் பெண்களின் நிலை மிகவும் பரிதாபத்திற்குரியது... இந்தக் கொடுமையான சமூகத் தளைகளை பெண்கள் உடைத்தெறிய முன்வரவேண்டும். சமூகம் என்கின்ற சுயநலப்பேய்களின் நாவுக்குப் பயந்து ஒதுங்கி தன்னுணர்வுகளைக் கொண்டே வெதும்பி வாழும் பெண்களைப்பற்றி நம்மினம் பெருமைப் படுவது எவ்வளவு போலியானது, அர்த்தமற்றது.

இப்படித் தன் எண்ணங்களை துணிச்சலுடனும். இதயபூர்வமாகவும் சொல்லும் திருமதி ராஜேஸ்வரியின் கணவர் பாலசுப்பிரமணியம் அவர்களும் கலை இலக்கிய துறைகளில் அதிக ஈடுபாடுள்ளவர் என்பது குறிப்பிடத்தக்கது.



மனைவி; கேட்டீர்களா?கொழும்பிலிருந்து வந்த மெயில் வண்டி புங்கங் குளத்தில் ஒன்பது பெட்டிகளைத் தவிக்க விட்டுப் போனதாம்.

கணவன்: சரிதான் அதுவும் சுயேச்சையாக இயங்க தொடங்கி விட்டதாக்கும்.

—மனே

---

பத்திரிகைச் சுதந்திரம் என்றுல் என்ன?

நாம் வாங்கும் பத்திரிகையை மற்றவர்கள் சுதந்திரமாகப் பாவிப்பதுதான்.

---



ஒரு: இக்காலத்து மாணவர்கள் அதிர்ஷ்டசாலிகள். முன்பு மணி பார்க்கத் தெரியாவிடில் எங்களை ஆசிரியர் அடித்தார்.

மற்: இப்போ எப்படி?

ஒரு: அவர்களுக்கு கல்குலேட்டரும், மணி மினிற் காட்டும் எலக்ரானிக் சுடிகாரம் என்றும் வந்துவிட்டது.

—ச. ரா. பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செய்தி முறுவல்

- பெட்ரோல் தட்டுப்பாட்டின் காரணமாக அமெரிக்கா இப்போ சிறிய கார்கள் உற்பத்தி செய்வதில் கூடிய கவனம் செலுத்துகின்றது.

□ சந்திர மண்டலம் போவதற்கு எரித்த பணத்தை கார் இயக்கும் எரிபொருளைக் கண்டு பிடித்திருக்கலாமே என வயிறெரிகின்றார் பெட்ரோல் இல்லாமல் திண்டாட்டப்படும் ஒரு கார் சொந்தக்காரர்.

- சிரிப்பு வாயு, பிராணவாயு இரண்டையும் கலந்து செலுத்தினால் இருதயநோய் சுகப்படும் ஒரு அமெரிக்க டாக்டரின் கண்டுபிடிப்பு.

□ சிரிப்பு மருத்துவத்தின் மகத்துவத்தை எப்பவோ உணர்ந்தவர் 'சிரித்திரன் ஆசிரியர்' என்கின்றார் ஒரு சிரித்திரன் நேயர்.

- மாதந்தோறும் சுமார் பத்தாயிரம் பேர் வேலைதேடி சவுதி அரேபியா, துபாய் போன்ற நாடுகளுக்கு இந்தியாவிலிருந்து செல்கின்றனர்.

□ ''ஏன் இலங்கையிலிருந்து போபவர்கள் குறைவா'' எனக்கேட்கின்றார் தனது ஐந்து செல்வன்களையும் அங்கு செல்வம்தேட அனுப்பிய தந்தை ஒருவர்.

- மேற்கு ஜெர்மன் நாட்டில் இப்பொழுது பெண்கள் குண்டாக இருப்பதுதான் அழகு எனக்கருதுகின்றார்களாம்.

□ யாழ்ப்பாணப் பெண்கள் அவர்களைப் பின்பற்றக் கூடாது என பிரார்த்தனை செய்கின்றார் ஒருபஸ் கொண்டாக்டர்.

- யப்பானில் எழுத்தாளர்கள் பெரும் சினிமா நடிகர்களிலும் கூடுதலாகச் சம்பாதிக்கின்றார்கள்.

□ தமிழனுக்கு கூழுக்கு கவிபாடும் தலை எழுத்து இன்னும் மாறவில்லையே என முகாரி பாடுகிறார் ஒரு தமிழ் புலவர்.

- இன்னும் இருநூறு ஆண்டுகளுக்குக் காணும்படியான புதிய எண்ணெய்க் கிணறுகள் குவைத்நாட்டில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

□ எமது நாட்டில் எண்ணெய்க்காகத் தோண்டி மூடப்பட்ட கிணறுகளில் ஒருசிலையாவது தோன்றவில்லையா என ஏங்குகின்றார் ஒரு புதைபொருள் ஆராய்ச்சியாளர்.


- மெக்ஸிகோ நாட்டில் மிளகாய் பயிரிடுவது மிகவும் லாபம் தரும் தொழில்

□ இலங்கையிலும் அப்படித்தான் இருந்தது இன்று நிலை வேறு... என்று கண்ணீர் வடிக்கின்றார் மிளகாய் பயிரிடும் விவசாயி.

- லண்டன் பஸ்களில் அலுவலக நேரம் தவிர மற்றும் நேரங்களில் பென்ஷன் வாங்குபவர்கள் இலவசமாகப் பிரயாணம் செய்யலாம்.

□ யாழ்ப்பாணத்தில் ''பென்ஷன்'' கொடுக்கப்பட்ட பஸ்ஸை நாம் இயக்கவேண்டியிருக்கிறதே எனப்பொருமுகின்றார் ஒரு சாரதி.

## வாழ்க சிறுவர் ஆண்டு



இவ்வாண்டு சிறுவர் ஆண்டுக் கொண்டாட்டமல்லவா!

உதையெல்லாம் சிந்திக்க நேரம் எங்கே இருக்கு.

காலை அப்பாவுக்கு கள்ளுவாங்கத் தூங்கியிட்டு இருக்கவேணும். மத்தியானம் அக்கா தரும் காதல் கடிதம் கொடுப்பதற்குத்தூங்கியிட்டு நிற்கவேணும். சாயந்தரம் அம்மாவுடன் படம் பார்ப்பதற்குத் தூங்கியிட்டு இருக்கவேணும்.



பெற்றோர்களும் ஆசிரியர்களும் ஓயாமல் கல் கல் என்று உபதேசம் செய்த படியால்தான் இன்றைய இளைஞர்களின் இதயம் கல்லாய்ப் போய்விட்டது.

—ஜோக்கிரட்டீஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசைக்குள் அடங்காத பாடல்கள்

தொடர் நாவல்

நாங்கள் ஒரு கொஞ்ச தூரம் கூட சென்றிருக்க மாட்டோம்

தியாகுவே வந்து கொண்டிருந் தான் நெற்றியில் இரத்தம் வடிந்து கொண்டிருந்தது. சட்டை கிழிந்து தொங்கிக் கொண்டிருந்தது

உடையெல்லாம் ஒரே சேறு...

நான் ஏங்கிப் போனேன;

''ஏஞ்சாமி... என்ன இது... என்ன நடந்திச்சு...'' என்று பூச்சி கேட்டது போலிருந்தது.

நான் என்னை சுதாகரித்துக் கொள்ள சில நிமிடம் எடுத்தது.

தியாகுவை உற்றுப் பார்த்தேன், அவன் கண்கள் எரிசரமாய்த் தோன்றியது. நடந்துமுடிந்த விபரீதத்தின் அனல் பார்வையில் மின்னியது.

''வா... முதல்லே றூமுக்குப் போய்க் கதைப்பம்...'' என்றபடி வேகமாக நடந்தான் தியாகு. அவன் மனக் கொதிப்பு நடையில் தெரிந்தது.

## 11

ஜன்னலினூடாக வானத்தை நோக்கி வெறித்தபடி நின்றிருந் தான் தியாகு.

ஜன்னல் கம்பிகளினூடாக, விரிந்து பரந்து வானக் கருமை யின் பின்னணியில் அந்த மொட் டை பனைமரத்து உச்சியில் ஏதோ ஓர் பறவை ஆழ்ந்த சோகத்தின் விரக்தியில் தனித்துப்போய் சோர்ந்து இருப்பது போல் தோன்றியது—

சற்று நேரம் அதையேபார்பவன் போல் நின்ற தியாகு ஒரு நெடு மூச்சுடன் திரும்பினுன்; எதையோ ஆழ்ந்து யோசித்தவன் போல் சொன்னுன்.

''எல்லாத்தையும் இழந்து போ கின்றவனுக்கு இழப்பதற்கு எது வும் இல்லையென்ற நிலையில் உள் ளவன் தான் துணை வருவான்...'' என்றபடி மீண்டும் திரும்பி அந் தப்பறவையும் மொட்டைப்பனை யையும் பார்த்தான் தியாகு.

—இம்மாதிரியான சிக்கலான நில மைகளில் நான் அவனிடம் எது வுமே கேட்டதில்லே, அவனுகவே சொல்லும் வரையும் நான் கிண் டிவிட நினைப்பதில்லே—.

''சாமி...சாயம் குடிக்கிறீங்களா'' பூச்சி எனக்கொரு கிளாசை

தந்து விட்டு தியாகுவிடம் நீட்டி னுன். அதனை வாங்கி மடமட வென்று குடித்துவிட்டு என்னை பார்த்தான் பின் பக்கத்தில் இருந்த கட்டிலில் படுத்துக் கொண்டான்.

''ஒரு பெண்ணின்ரை வாழ்க்கை யோடை எவ்வளவு மோசமா விளையாடுறுங்கள்?... எதற்கெடுத் தாலும் பெண்ணைப் பற்றி கூட் டங்களிலும் புத்தகங்களிலும் பெரிசா பேசுறுங்க புகழுறுங்க... ஆனு நடை முறையில்... ஒரு சின்ன விஷயத்துக்குக் கூட பெண்ணை, தாய்மையை சந்திக் கிழுத்துத்தான் பேசுகிறுங்கள்... சீ இவ்வளவு மோசமான இனத் திலே வந்து பிறந்ததை நினைக்க அவமானமாயிருக்கு... சாதாரண மனிதாபிமான உணர்வுகளைக் கூடப் புரிந்து கொள்ளாத ஒரு இனம் உரிமைளுக்காக போராடு கிறதாம்... நினைக்கவே சிரிப் பாகக்கிடக்கு... பாத்தியாப்பா நாங்க கமலாவுக்கு அந்தக் குடும்ப நிலையை நினைச்சு எவ்வளவு Sincere ராக உதவி செய்ய நினை ச்சம் ஆகு... ஆகு...'' அவன் குரல் தழுதழுத்து கண்கள் கலங்கின—

'எனக்கு எல்லாம் தெரியும்... போக்கணங் கெட்டவங்களின்ரை கதையை கேட்டு நீயே... இப் படி அழுதா நான் சொன்னேன் ''இல்லே... நான் அதுக்கு கவலேப் படேல்லே... ஆரும் எதையும் கதைக்கட்டும் என்னைப் பற்றி... சொல்கிறவனுக்கும் விசர் அதை நம்புறவனுக்கும் விசர்... எனக் கென்ன... ஆனு ஒரு அப்பாவிப் பெண்ணின்ரை வாழ்க்கையே பாழ்படுத்திற அளவுக்கு யோசிக் காம கதைக்கிறுங்களே... அதை நினைக்கத்தான்... அந்த ராஸ்கல் குமார்... சந்தியிலே நிண்டு எவ்வ ளவு கேவலமாய்ச் சொன்னுன் தெரியுமா? எனக்குவந்த ஆத்தி ரத்திலே நானும் அடிச்சுப்போட் டன்...

''நீ... பேசாமல் வந்திருக்கலாம் இப்ப பெரிய பிரச்சனையாகி... இன்னும் இது ஊரெல்லாம் பரவி கமலாதான் பாவம்... ஊருக்குள் ளேயே நடமாட முடியாமல் போ கப் போகுது...''

''அவன் நிமிர்ந்து என்னைப்பா ர்த்தான் அவன் உறுதியான குரலில் சொன்னுன்''

''கமலாக்கு... இனிமேல் தான் கூடுதலாக உதவி செய்யப் போறன் இவ்வளவு நாளும் அவளை உன்ரை தங்கச்சி என்று மட்டும்தான் நினைச்சிருந்தனுன்... இனிமேல் அவள் என்ரை தங் கச்சியும் தான்... உலகம் என்டது இந்த ஊர்மட்டுமல்ல... அது பாந்து விரிஞ்சது மனிசனு வாழ நினைக்கிறவன் உலகின் எந்தமூலே யிலும் வாழமுடியும்... நீ நினைக் கிறமாதிரி... ஒதுங்கிக்கொண்டா மட்டும் பிரச்சனை தீராது...'' அவன் எழுந்து நின்றுன்—

---

கமலா: அதில நிற்கிறது ஆரு... காதில கையில எல்லாம் இமிட்டேசன் நகை யளாக் கிடக்குது...

விமலா: பொலீஸ் இன்ஸ்பெக்ரர் மனைவி. கள்ளர் பயத் தில இப்பிடி போரு போல...

—அனலேதீவு க. சௌந்தரராஜன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனை வியப்போடு பார்த்தேன். மனிதாபிமானம், துணிவு, இதய சுத்தி, நேர்மை தார்மீக ஆவேசம்... கொண்ட விசுவரூபியாகி...

———00000———

## 12

மத்தியானச் சாப்பாடு 'பாவேடு' கழிந்தது.

சற்றுமுன்னர் நடந்து முடிந்த அசம்பாவிதங்களின் 'நிழல்' இன்னும் நடமாடிக் கொண்டிருப்பது போலிருந்தது.

மௌனம்—ஒரே மௌனம்—

பூச்சிக்கிழவன் அடிக்கடி 'றூமை, எட்டிப் பார்ப்பதும் போவதுமாக இருந்தான். இன்று எப்படியாவது தனது கடைசிமகன் வேலாயுதனைப்பற்றி தியாகுவோடு கதைக்கவேண்டுமென்றிருந்தான் அவன் அதற்குள் இப்படியொரு நிலை ஏற்பட்டது அவனுக்கு வருத்தமாக இருக்கவேண்டும். தியாகுவின் நெற்றி வீங்கிப்போயிருந்தது.

ஏதோ யோசனை வந்தவனாகக் கேட்டான்.

''சிவராமன்ரை கடிதம் ஏதோ இருப்பதாகச் சொன்னுயல்லவா எங்கேயது?''

—மேசையில் கிடந்த 'பைலுள்' இருந்த கடிதத்தை எடுத்துக் கொடுத்தேன் சுமார் நான்கு முழுப்பக்கங்களை அடங்கிய அந்த நீண்ட கடிதத்தை ஒரு கதையைப் படிக்கும் பாவனையில் படிக்கத்தொடங்கினன் தியாகு படிக்க படிக்க அவன், புருவநெரிப்பிலும் நெற்றிச் சுருக்கலிலும் அந்தகடித வரிகளின் தாக்கத்தின் ஆளுமை அவனை எவ்வளவு பாதிக்கின்றது என்பதைப் புரிந்து கொண்டேன் கடிதத்தின் இறுதிப் பந்தியைச் சற்று பலமாகவே படித்தான்.

...வாழ்க்கையின் எல்லாப் பக்கங்களும் இருட்டாகவே இருக்கின்றது நீ எனக்கு அடிக்கடி தருகின்ற நம்பிக்கை விளக்குகள் கூட சிறிதுநேரம்தான் துணை நிற்கிறது இந்தச் சமூகத்தின் நச்சுக்காற்றுகள் அதனை சுலபமாகவே அணைத்து விடுகின்றன. என் திறமைகளை, ஆற்றலை, லட்சியங்களை யெல்லாம் நீ ஒருவன் மட்டும்தான் புரிந்துகொண்டு பெருமைப் பட்டிருக்கிருய்... அந்த நிறைவு மட்டும்போதும்... புதிய சஞ்சிகைக்குக் கவிதை கேட்டிருந்தாய்...'காற்ருேடு போன கவிதைகள்' அனுப்புகிறேன் கவிதைமட்டுமா காற்ருேடு போயிற்று? நானும் சேர்ந்தே போய்க்கொண்டிருக்கிறேன்.

நண்பன்
சிவராமன்

தியாகுவின் கண்கள் ஒரேநாளில் இரண்டாவது முறையாகப் பனித்தன. அவன் முகத்தில் ஒருநாளும் காணுத உணர்ச்சி கொப்பளித்து கொண்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

வேகமாக எழுந்து மேசையில் இருந்த செம்புத்தண்ணீரை குடித்தான்.

''பாத்தியா சிவராமன் எழுதியதை... மனிதகுலத்தின் நம்பிக்கைக் குரலாக கவிபாடும்... அவன்ரை வாழ்க்கையில் எந்தவித ஆதரவுமின்றி மரணம்தரன் என் ஒரே நிம்மதிதரும் நம்பிக்கை என்று எழுதியிருக்கிருனே......' என்றபடி அவன் எழுதியனுப்பிய 'காற்ருேடு போனகவிதைகள்'— கவிதையை உரத்துப்படித்தான் தியாகு.

சிவராமனின் ஜீவன்ததும்பும் வார்த்தைகளுக்கு உணர்வும் வலுவும் ஊட்டி தியாகு வாசித்த போது... சிவராமனே நேரில் வாசிப்பது போன்ற உணர்வில் தேகமெல்லாம் புல்லரித்தது தியாகு வாசித்துக்கொண்டே போனுன்...

இறந்து வரும் இந்தயுகம்...
என்பாட்டை கொன்றுவிடும்...
நம்பிக்கைப்பூக்கள்
நாளைக்கே உதிர்ந்துவிடும்...
ஆற்றல் மிகுந்தோரின்
மணல் மேடே
மிஞ்சி நிற்கும்...
எந்த—
இசைக்கும் அடங்காத
பாடல்கள்...
ஆங்காங்கே—
சிதறிக் கிடக்கும்—
ஜீவனற்று மணம்பரப்பும்...
ஆனுலும்...
காலம் சாகாது...
கவிதைகளும் பொய்க்காது...
புதுக்கோலம் கொள்ளும்
ஒருநாளின் அதிகாலை,..
வெறுமை பூத்த—
வீதிக் கோடுகளில்
கால்கள் தடம்பதிக்கும்
சக்கரங்கள் சுழன்ருேடும்...
ஆலைச்சங்கலறுது...
ஆனுலும் தொழிலாளர்
காலந்த வருது
கடமைகளைத் தாம்முடிப்பார்...
வாலைக்குமரியரும்...
வாலிபரும் வயல்களிலே...
கவிதைகளை விதைத்திடுவர்
கவிதைகளைப் பாடிடுவர்...
காற்ருேடு செல்லும்
கவிதை ஒலி...
சுடுகாட்டின் மணல்மேட்டில்
ஒருகணம் தரிக்கும்...
கள்ளிமலர் செடியின்
வேரடியில் துயில்கின்ற
என்—
காதடியில் கேட்கும்—அக்
கவிதைகளில்
நான் உயிர்ப்பேன்—
மீண்டும்
காற்றினிலே வாழ்ந்திடுவேன்...

---



இந்தக்காலத்துப் பெண்மணிகள் ஆடைக்குறைப்பை விரும்புகிருர்கள் நாகரீகமென்று, ஆனுல் முழு ஆடைதான் வேணுமென்கிருர்கள். ஆமாம் முழுஆடை நிறைந்த பால்மாதான் (Full-Cream) வேண்டுமென்கிருர்கள் எங்கள் கடைக்குவந்தால்.

—ஒரு கடைக்காரர்

---

பணக்கார வீடுகளில் நாயை வளர்க்கிறதிற்குப் பதிலாக நாலு அநாதைக் குழந்தைகளை வளர்க்கலாமே.

நாய் உன்வீட்டு ரகசியத்தைப் பிறருக்குச் செல்லாதே!

—அதிமதுரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் அக்கவிதையைப் படித்து முடித்தபோது எங்கள் இருவர் முகத்திலும் இனம் புரியாத உணர்ச்சி நிறைந்திருந்ததை நாம் புரிந்து கொண்டோம்.

சிறிதுநேரம் அந்தக் கவிதையிலேயே ஆழ்ந்துபோயிருந்தோம்

சோக இருள் கப்பிய முகமும் அதிலே மின்னற் புள்ளியாய் தெறிக்கும் கண்களுமாக சிவராமனின உருவம் அந்த அறையெங்கும் நிறைந்து நின்றது.

அமைதி... ஒரே அமைதி...

''சேத்துக்குள்ளே நிக்காமை... ஓடுங்க வீட்டுக்கை... எடீ 'ரேணு எத்தனை தரம் சொல்லுறன் போ உள்ளுக்கு...'' வெளியே ராமநாதன் தன்பிள்ளைகளை விரட்டும் குரல்கேட்டது. 'டேய் பசங்களா வாங்கடா இங்கை...'' பூச்சிக்கிழவனும் பேரப்பிள்ளைகளைவிரட்டினான்.

நாங்கள் சுயநிலைக்கு வந்தோம் தியாகு சொன்னான். ''சிவராமன் எவ்வளவு பெரிய கவிஞன்... எங்களை சமூகம் மனித ஆற்றல்களை எவ்வளவு அறிவீனத்துடன் மதிக்கிறது என்பதற்கு அவன்ரை வரண்ட வாழ்க்கையிலே நல்ல உதாரணம்... நாளை நாளையின்டைக்கு... அவனிட்டை ஒருக்கால் போகவேணும்...'' நானும் தலையசைத்தேன்.

———ooo——

உலகில் வேலை செய்யாது வாழ்பவரும் நிறைய உண்டு.

வாழாது வேலை செய்பவர்களும் நிறைய உண்டு.

## 13

பாண் வாங்கப்போன தம்பி வியர்க்க விறுவிறுக்க வந்து சொன்ன கதையைக் கேட்டபோது 'கமலா' அப்படியே சிறிது நேரம் ஸ்தம்பித்துப் போய்விட்டாள்.

''ஓமக்கா... இரண்டு பேருக்கும் நல்ல காயம்... நான் பார்த்தனான் நல்ல வேளை... குமாரு இரும்பொன்றை தூக்கி அடிக்க ஓங்கினான் கூப்பன்கடைச் சின்னத்தம்பியர் பிடிச்சிட்டார்... இல்லாட்டி பிறகு குமாருவை எல்லாரும் பிடிச்சிழுந்துக்கொண்டு போட்டினம்... தியாகண்ணை தனியத்தான் போனவர்... சின்னண்ணை வீட்டைதான் போயிருக்கவேண்டும்... அந்தப் பக்கம் தான் போனவர்...''

'கமலா'வுக்கு கண்ணெல்லாம் இருண்டு கொண்டுவந்தது. என்னுலை எவ்வளவு பிரச்சனை... எவ்வளவு கரைச்சல்... அவள் தனக்குள்ளே குமுறிக்கொண்டாள்— செல்லாமாமி அடுத்த வீட்டில் சத்தம்போட்டுக் கத்துவது கேட்டது.

''வந்தான் வரத்தானுக்கெல்லாம் இடங்கொடுக்கிறது... அதுகள் எங்களுக்கே வாலாட்டுதுகள்... பாவம் அந்தப்பெடியன் குமார் இப்பகொஞ்சம் முந்தித்தானே பாண்வாங்கிக்கொண்டு வந்துதந்திட்டுப் போனது... அதுக்கு இப்படி ஒரு விதியோ...?''

அவையளுக்கும் விஷயம் தெரிந்து விட்டது போலும்...'

கமலா வேகமாக உள்ளே போனாள்.

——oo——oo——

## 14

பூச்சிக்கிழவன் ஒருபாட்டம் அழுது தீர்த்தான்.

மலையகத்தின் சரித்திரமே அவனது வாழ்க்கை போலிருந்தது எனக்கு.

—கிட்டத்தட்ட முக்கால் நூற்றுண்டு காலச்சரித்திரம் அவனது வாழ்க்கையாக மிளிர்ந்தது.

—ஏமாற்றங்களும், நிராசைகளுமே அவனது அனுபவங்களாகி வார்த்தைகளாய் வெடித்தன.

தியாகு அமைதியாக இருந்தான் இன்று ஒருநாள் முடிவதற்குள்ளேயே அவனுக்கு எத்தனை அனுபவங்கள்...

பூச்சிக்கிழவன் தியாகுவையே பார்த்துக் கொண்டிருந்தான்— பின்கேட்டான்

''தம்பீ... நம்ம வேலாயுதனைப் பற்றி சொன்பேனே ஞாபகமிருக்குதிங்களா'' யாகு திரும்பிப் பூச்சியைப் பார்த்தான். பூச்சியின் இடுங்கிய பார்வையில் ஆவலும் நம்பிக்கையும் எதிர்பார்த்துக் கிடந்தன.

நர்ளைக்கு அந்த வேலைதான்...'' என்றபடியே வீங்கிய நெற்றியை கைகளால் மெல்லத்தடவிக் கொண்டான் தியாகு.

கதவடியில் பூச்சியின் பேரப்பிள்ளைகள் தலையை நீட்டின,

'பசி' — முகத்தில் எழுதப்பட்டிருந்தது.

பூச்சி கத்தினான் — ''வெளியே இருங்கடா வாறன்''

'கப்சிப்'பென்று தலைகள்மறைந்து விட்டன. பூச்சி எழுந்தான்.

நான்கேட்டேன்; வாவன் பள்ளிக்கூடம் வரையும் போட்டு வருவம் தியாகு பதில் சொல்லாமல் எழுந்தான் அவன் மனத்தில் கமலா... குமாரு... சிவராமன், பூச்சிக்கிழவன் எல்லாம் நிழலாடினர்.

மேசையடிக்குச் சென்று தனது துணிப்பையை எடுத்து மாட்டிக்கொண்டான். மேசையில் விரித்துக்கிடந்த சிவராமனின் கவிதையில் பார்வை பதிந்தது...

...எந்த இசைக்கும் அடங்காத பாடல்கள்... சிதறிக்கிடக்கும... ஜீவனற்று மணம்பரப்பும்...

அந்த வரிகள் பார்வை விழுங்க... மனம் அசைபோட்டது,

போவமா—நான்கேட்டேன்.

'ஓம்' என்று வெளிக்கிட்டான் தியாகு.

ஜன்னலைச் சாத்திவிட்டு — கதவைத் திறந்தேன்—

வாசல் கேற்றடியில் யாரோ கதைப்பது கேட்டது. தொடர்ந்து ரேணுகா ஓடிவந்து மா...மா... மாமா... யாரோ ஒருஅக்கா வந்திருக்கிறு'' என்றுள்.

கதவை பூட்டிக்கொண்டிருந்த நான் நிமிர்ந்து பார்த்தேன்

—கமலாவும் தம்பியும் வந்து கொண்டிருந்தனர்.

—தொடரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள்
அழகுச் சிலையாகத்திகழ....

உங்கள்
மணங்கவர்
புதுமையான
புடவை வகைகளுக்கு....

வருகை தாருங்கள்
தயாளினி ரெக்ஸ்ரைல்ஸ்

கண்டி வீதி,
கிளிநொச்சி

இது தேர்தல் காலம்
நீங்கள்
விரும்பிய ஆடையைத்
தேர்ந்தெடுப்பதற்கு

சிறந்த இடம்
சோதி ரெக்ஸ்ரைல்ஸ்

14, நவீன சந்தை
யாழ்ப்பாணம்.

புத்தாண்டில் உங்கள்
புத்தாடைகளின்
புதுமையான தேர்வுக்கு....

எண்ணம் நாடும்
வண்ணக் 'கலை'க்களஞ்சியம்

நியூட்டன் ரெக்ஸ்ரைல்ஸ்
உங்களை அழைக்கிறார்கள்

கிளிநொச்சி

சகலவித விளைபொருட்களும்
சாய்ப்புச் சாமான்களுக்கும்
நம்பிக்கைக்குரிய ஸ்தாபனம்
லீலாவதி ஸ்ரோர்ஸ்

கைதடிச் சந்தி
கைதடி

சகலவித விளைபொருட்களுக்கும்
விவசாய உர வகைகட்கும்
நாடுங்கள்
கௌரி ஸ்ரோர்ஸ்

கண்டிவீதி, கொடிகாமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதைத்தேன்

## பெறுபேறு!

''தம்பீ... ராசா... இங்கு ஓடிவா உன் தம்பியை வந்து பார்... உன்னோடு விளையாடுவதற்கு ஒரு தம்பி பெற்று வந்திருக்கிறேன்... எங்கே ஒளித்து நிற்கிறாய்... தம்பியைப் பார்க்க வெட்கமாயிருக்கிறதா... ஓடி வா... என் செல்வம்......'' —என்று ஆஸ்பத்திரியில் இருந்து பிரசவத்தின் பின் வந்த அந்தப் பெண் தன் முதல் மகனை அழைக்தான். அவனைக்காணவில்லை—

பக்கத்தில் நின்ற அவள் கணவன் சொன்னான்—

''அவன் இனி வரவேமாட்டான் அவனை விற்றுத்தானே உன் பிரசவச் செலவுகளை செய்துகொண்டிருக்கிறேன்''

''தேனுகா''

## யாழ்ப்பாணத் தமிழர் தேவர்கள்

நான் எனது இந்திய நண்பருடன் சாவகாசமாக பல விஷயங்களைப் பேசிக் கொண்டிருந்தேன்.

பேச்சு சுவாரஸ்யத்தினிடையே அவர் ''யாழ்ப்பாணத் தமிழரெல்லாம் தேவலோகத்திலிருந்து தவறி வந்தவர்கள்'' என்று சொன்னார்

நான் திரு திருவென்று முழித்தேன்.

''சம்மதத்தினை குறிக்கிற எதற்கும் இந்தியத் தமிழர்கள் 'ஆம்' என்றே சொல்கிறார்கள் ஆனால் நீங்களோ 'ஓம்' என்றுதான் சொல்கிறார்கள் 'ஓம்' என்று சொல்வதே சரி என்று விளக்கிய நண்பர் அதற்கு உதாரணமாக பாரதி பாடலொன்றைக் கூறினார்.

ஓம் என்றுரைத்தனர் தேவர்
ஓம் ஓமென்று சொல்லி உறுமிற்று வானம்''

ஸயின்ஸ் இல்லாத சமயம், நொண்டி; சமயம் இல்லாத ஸயின்ஸ், குருடு. —ஆல்பர்ட் ஐன்ஸ்டைன்

## TAMIL 13

தமிழ் என்ற எமது பழம்பெரும் மொழி இன்று இந்த நிலையில் எந்த நாட்டிலும் பலமற்ற மொழியாக இருப்பதற்குக் காரணம் ''TAMIL'' என எழுதப்படுவது தான்.

ஏனெனில், TAMIL, 4+1+4-|-1-|-3 = 13

எண் சோதிடப்படி 13 ஒரு கூடாத இலக்கம். உலகில் செல்வாக்கோடு இருக்கும் மொழிகள் இந்த 13 இலக்கத்தைக் கொண்டிருக்கவில்லை.

இதனை எண்சோதிட நிபுணர்கள் பரிசோதித்து, மாற்ற வேண்டியது அரும்பெரும் கடனாகும்.

## யாழ் மலர்கள்

யாழப்பாணம் மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு அருகாமையில் இருக்கும் புல்லுக்குளம்—

திறந்தவெளி அரங்கிற்கு அருகாமையில் செல்லும் வீதியில் நின்றபடி குளத்தையும் அதன் அக்கரையில் பசிய மரங்களடர்ந்து பசுமை செழித்து கிடக்கும் ரம்மியமான காட்சியை ரஸித்தபடி நிற்கும் இருவெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள்—

அவள் சொன்னாள் Look at that beautiful Scene there (அந்த அழகான காட்சியைப் பாருங்கள்)
அவன் பார்த்தான்.

அவள் மீண்டும் குதூகலத்துடன் சொன்னாள், ''Look at those large beautiful white flowers there'' (அங்கே உள்ள பெரிய அழகிய வெண்மலர்களைப் பாருங்கள்)

அவன் பார்வை மரங்களிடையே அங்குமிங்குமாக வெள்ளை புள்ளிகளாகத் தெரிந்தவற்றில் நிலைத்திருந்தது

எங்கிருந்தோ ஒரு வெடிச்சத்தம்—

திடீரென்று அவள் வியப்புடன் கத்தினாள்
Oh... those big white flowers are flying there...'' (ஓ... அந்த வெண்மலர்கள் பறக்கின்றனவே...)

அவனும் வியப்புடன் அண்ணாந்து பார்த்தான் அங்கே மரத்திடையில் மீனுக்காக ஒற்றைக்காலில் தவமிருந்த வெண்கொக்குகள் பறந்து கொண்டிருந்தன.

## மகாவலி கங்கை...

மகாவலி கங்கையை வடபகுதிக்குத் திருப்புவதாகக் கூச்சலிடுகிறார்களே வடபகுதியிலிருந்தல்லவா மற்ற இடங்களுக்கு அதைத்திருப்ப வேண்டும். ஆமாம் தரப்படுத்தலால் பெருகும் கண்ணீரைத்தான் சொல்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Don't Read

உங்கள் தேவைகள் எதுவானாலென்ன?

இன்றே விஜயம் செய்யுங்கள்

யாழ்நகரில் சகலவிதமான

★

சாய்ப்புச் சாமான்களுக்கும்

மலிவாகவும் உத்தரவாதத்துடனும்

கிடைக்கும் ஒரே இடம்

!

# ராஜூ ஸ்ரோர்ஸ்

**67 - 69' கஸ்தூரியார் வீதி,**


**யாழ்ப்பாணம்.**

தொலைபேசி; 372 தந்தி: "ருஜூ".


தலை நிமிர்ந்து நில்லடா என்கிறார்கள், தலைகுனிந்து நில்லடா என்றும் சொல்கிறார்கள்.

எங்கே?

தியேட்டரில் படம்பார்க்கும் பின்னுக்கிருப்பவர்கள்.





பத்திரிகைச் சுதந்திரம் என்றால் என்ன?

நாம் வாங்கும் பத்திரிகையை மற்றவர்கள் சுதந்திரமாகப் பாவிப்பதுதான்.

தரகர்: யாழ்ப்பாணத்திற்கு டெலிவிஷன் வந்தால் எங்கள் பாடுதிண்டாட்டம்

மற்; ஏன்

தரகர்: டெலிவிஷனில் தோன்றும் பெண்களைப் பார்த்து கலியாணங்கள் நடக்கும்





டெலிவிஷன் வந்தால் நம் நாட்டு மக்களின் ரசனை எப்படி இருக்கும்.

என்ன இருந்தாலும் அடுத்தவீட்டு விஷயங்களை வேலிக்குள்ளால் பார்க்கிற ரசனைவராது



மாமி: உன் கணவர் ஏன் இரவில் அடிக்கடி எழும்பி நடக்கிறார். தூக்கத்தில் நடப்பவரா?

மருமகள்? இல்லை. கூட்டங்களில் வெளி நடப்புச் செய்து பழகிப்போய்விட்டது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முரண் பா(ட்)டு(க்)கள்

● வா நிலா... நிலா... என்
வாசலில் நிலா

— நிலவே என்னிடம் நெருங்காதே
நீ நினைக்கும் விதத்தில் நானில்லை

● நிமிர்ந்து நில் துணிந்து செல்
தோல்வி கிடையாது தம்பி

— போகாதே போகாதே...
என் கணவா பொல்லாத சொர்ப்பனம்
நானும் கண்டேன்

● படிக்கவேணும் புதியபாடம்
வாத்தியாரய்யா

— எல்லாந்தான் படிச்சீங்க
என்ன பண்ணிக் கிழிச்சீங்க

● மனைவி அமைவதெல்லாம்
இறைவன் கொடுத்த வரம்...

— வீடுவரை உறவு வீதிவரை மனைவி...

● மன்மத லீலையை வென்றாருண்டோ...
உலகில்...

— பட்டது போதும் பெண்ணாலே — இதை
பட்டினத்தாரும் சொன்னாரே...

● இறைவன் என்றொரு கவிஞன் — அவன்
படைத்த கவிதை மனிதன்

— இறைவன் எழுதிய பாடலுக்கு
மனிதன் இசையமைத்தான்.

● நினைத்தது ஒண்ணு
நடந்தது ஒண்ணு — அதனாலே முழிக்குதே......

— நினைத்ததை நடத்தியே
முடிப்பவன் நான்...

● ஆடி அடங்கும் வாழ்க்கையடா
ஆறடி நிலமே சொந்தமடா......

— எட்டடுக்கு மாடிபட்டி கட்டிடத்தை
கட்டிவைத்து, எட்டடிக்குள் வந்து படுத்தார்


## இரசாயனக் குறள்கள்

அற்கேன் முதல் அற்கின் வரை — ஐயோ
கற்கேன் கடவுளே நான்.

கற்றதனாலாய பயன் என்கொல்—வெறிதரும்
அற்ககோல் அருந்தாமல் விடல்.

அத்தரும் 'சென்ருப்' அசல் மணமென்பாய—Lapஇல்
ஐதரசன் சல்பைட்டு மணக்காதார்.

அச்சுவேலி, கீதா



## உதயம்

வருக புத்தாண்டே! வளமோடும் சித்திரையில்
தருக நம்பிக்கை! உழைப்பு நல்லிதயம்
பெருகவும்; பாட்டாளி வாழ்க்கையில் விடிவொன்று
உருவாக; உண்மையும் உழைப்பையும் வாழ்த்துவாய்!

ஓலைக் குடிசைகளில் உழைப்பேதும் இல்லாமல்
வேலை வருமென்று வீணாய் இருப்போர்க்கும்
வேலைக்கு உணவோடு வேண்டிய உடையடையும்
நாளொன்று வருமென்ற நம்பிக்கை தருவாய்!

கறுப்பு; கண்குருடு; கூலியின் பிள்ளையென,
பொறுப்பற்றுப் பணங்கேட்டுப் பெண்ணை ஒதுக்கி
வெறுப்பேற்றும் காளையர்கள் சீதன விலங்கொடிக்கும்
பொறுப்பேற்பார் தோழியரே: விழிநீர்விடும் என்பாய்

அன்பிற்கு வளைந்து அடுத்தவரை வாழ்த்தும்
பண்புடைய பெரியோர், பாவலர்கள் வாழ்வில்
நன்மைக்கு வித்திடுவாய்! நாட்டில் எப்போதும்
உண்மைக்கே வெற்றியென உரைப்பாய் புத்
தாண்டே!

இனிய புத்தாண்டே! இனியேனும் வறுமையின்
தனிமை வாட்டாத; தாய்க்குலம் குமுறாத;
'புனித ஆன்மீக சமத்துவ வாழ்வென்னும்'
இனிய பாதையிலே நடப்பாய் நலந்தருவாய்!

சிவசக்தி



எங்கள் கிராமத்தில் உள்ள குளத்தைப் புனருத்தாரணம் செய்த
தில் நல்லபலன் கிடைத்தது.

அப்படியா? விவசாயம் அபிவிருத்தி அடைந்ததா.

இல்லை. ஏகப்பட்ட சைக்கிள்கள் கிடைத்தன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




□ மன்னாரில் மீண்டும் பெற்ரோல் வள ஆய்வு நோர்வே அரசுடன் ஒப்பந்தம்.
—மாவட்ட அமைச்சர் ஜனுப் மஹ்ரூப்

□ இலங்கையில் பெற்ரோல் விலை அதிகரிக்கும் பங்கீட்டு முறையும் வரலாம்
—பத்திரிகைச் செய்தி

□ 'பஸ்'சேவை சீரமைக்கப்படும். பொது மக்கள் வசதிக்காக தனியார் துறையினரும் 'பஸ்' சேவையில் அனுமதிக்கப்படுவர். —செய்தி

□ மொனராகலை சென்ற பஸ் மரத்துடன் மோதல் 68 பேர் காயம். இருவர் கவலைக்கிடம்
—செய்தி

□ புத்தாண்டில் மக்கள் வாழ்வு மேலும் ஒளிமயமாகும் —பிரதமர்

□ புத்தாண்டுக்குப்பின் மின்சாரவெட்டு ஏற்படும்
—அமைச்சர் விஜயதுங்க

□ ''விவசாய உற்பத்தி துறைகளில் பாகுபாடு காட்டப்படமாட்டாது'' —கப்பளை எம். பி.

□ தோட்டப் பயிற்சிகளில் ஈடுபட்டிருந்த 200 தமிழ் வாலிபர்களுக்கு விலகல் கடிதங்கள்.
—பத்திரிகை செய்தி

□ எமது ஆட்சிக்காலத்துள் நாட்டின் பெரும்பான்மையான பிரச்சனைகளுக்கு தீர்வு கண்டு விடுவோம்.
—பிரதமர்

□ முதலாளித்துவக் கட்சிகளால் நாட்டின் பிரச்சனைகளைத் தீர்க்கமுடியாது. —ரோஹண விஜயவீர

□ ஈரானில் வாழும் வெளிநாட்டவர்களை வெளியேற்ற வேண்டும் —புதிய ஈரான் அரசு

□ உகண்டாவிலிருந்து விரட்டப்பட்ட வெளிநாட்டவர்கள் விரும்பினால் வந்து குடியேறலாம்.
—புதிய உகண்டா ஜனதிபதி

□ ''இடிஅமீன் சூடானுக்குள்ளாகச் சென்று லிபியாவில் தஞ்சமடையலாம்.'' —செய்தி

□ ''நானே இன்னமும் உகண்டாவின் ஜனதிபதி''
—இடிஅமீன்

□ இலங்கை இந்திய அரசுகள் கவிழ்வதற்குக் காரணம் அமெரிக்காவே. —இந்திராகாந்தி

□ ''இந்திராவின் தேர்தல் செலவுக்கு அமெரிக்கா பணம் கொடுத்தது.
—இந்திய மத்திய அமைச்சர்


---



ஒரு: அதுசரி. இவ்வளவு தூரத்திலை இருந்து என்ன இளுவை இளுக்குதுங்க. இந்த டெலிவிஸன்!

மற்: இதென்னங்க பெரிய இளுவை? இரானிலை இருக்கிற பையனை. இனுவிலிலை இருக்கிறபொண்ணு இளுத்த இளுவையில் வருகிற மூகூர்த்தத்துக்குதிருமணம் இது எப்படி இளுவை

செல்லப்பிள்ளை



ஒரு: என்னங்க! இந்த டெலிவிசன் காட்சியை நேற்று பார்த்தேனுங்க என்னமா காட்சியெல்லாம் காட்டுறுங்க!

மற்: இதென்ன பெரிய அதிசயமா சொல்றீங்க. வெற்றிலையிலை (மையைபூசி) அனுமாரை காட்டுறுனே எது அதிசயம்?

— செல்லப்பிள்ளை

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாவகச்சேரியிலே....

■ சேட்டிங் ■ சூட்டிங்

நவநாகரீக உடுபுடவைகள் யாவும் பெறுவதற்கு

நாடுங்கள்

குயின் டெக்ஸ்

மொஸ்க் பில்டிங், சாவகச்சேரி

அதிக சுவைக்கு அண்ணா கோப்பியே!
அண்ணா கோப்பிக்கு நிகர்!!
அண்ணா கோப்பியே!!!

அண்ணா கோப்பி
தொழிலகம்

இணுவில். தொலைபேசி: 36063

அழகுக் கலைக்கோலம் தரும்
அற்புதப் புடவைத் தினிசுகளுக்கு
ஒப்பற்ற இடம்
சிங்காரம்ஸ்

நங்கையர் நாடும் நவநாகரீக நகைகளுக்கு
டைமா நகை மாளிகை

செட்டியார் தெரு.
தொலைபேசி: 20875, கொழும்பு

மிட்வூட் இன்டஸ்றீஸ் ஸ்தாபனத்தாரின்
போட்டி முடிவுகள் அடுத்த இதழில்
இடம் பெறும்.

ஈழத்தின் இனிய இலக்கிய

மாத இதழ்

இன்றே விஜயம் செய்யுங்கள்

சகலவிதமான உணவுப் பொருட்களுக்கும்

சாய்ப்புச் சாமான்களுக்கும்

குணரெத்தினம் ஸ்ரோர்ஸ்

96, ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம். தொலை பேசி: 556



ஒரு: பொன் கொழிக்கும் புதுவருடப்பலன் போல! பிஸ்னெஸ் கடையில் கலகலப்பாக இருக்கிறதே!

மற்: பெஸ்ட்டோன் செய்யும் விளம்பர சேவையின் பலாபலன்.



ரசிக நெஞ்சங்களை அள்ளும் அறிவிப்பாளர்

■ மணிக்குரல் மேஜர்சண

■ எஸ். கே. கனகராசா

அவர்களின் விளம்பர சேவை

— பெஸ்ட்ரோன் —

BESTONE ● ● பஸ்நிலையம்
JAFFNA ● ● யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதம தபாற்கந்தோரில் செய்திப்பத்திரிகையாகப் பதிவு செய்யப்பெற்றது. பதிவு இலக்கம் பி. கியூ 35/000

# தேர்தல்!

வாழ்க்கை அழகுபெற உங்களுக்காக உழைக்கும் முயல் மார்க் நூலைத் தேர்ந்தெடுங்கள்.

தயாரிப்பாளர்கள்:

**சம்பியன் திரெட்**

**மனுபக்சரிங் கம்பனி**

கொழும்பு-12

559, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் சி. சிவஞானசுந்தரம் அவர்களால், 559, கே. கே. எஸ் வீதியில் உள்ள கவின் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org